# முக்கிமலை ஊர்
# கோவை வாழ் மக்கள் நல மன்றம்

**(Welfare Association of Mukkimalai Villagers living in Coimbatore)**

(**பதிவு எண் :** SRG/Coimbatore North/139/2024 ; Dated 12.07.2024)

**2025 - 2026 நிதியாண்டின்**

# பொது ஆவணத்தொகுப்பு
# (General Dosseir)

## முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

**2025-2026 நிதியாண்டின்**

## பொது ஆவணத் தொகுப்பு (DOSSIER)

## உள்ளடக்கம்


1. 2025-2026 வருடத்திய வரவு செலவு விவரங்கள்

2. 2025-2026 நடந்த நிர்வாக குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்களும் தீர்மானங்களும்

   - 20-4-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 18-5-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 15-6-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 13-7-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 23-7-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 10-8-2025 - பொதுக்குழு கூட்டம்
   - 14-9-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 23-11-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 27-12-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 3-11-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 28-1-2026 - நிர்வாக குழு கூட்டம்
   - 15-2-2026 - நிர்வாக குழு, பொதுக்குழு கூட்டம்

3. முதல் ஆண்டு நிறைவு விழா செயல் அறிக்கை (2024-2025 நிதி ஆண்டிற்காக அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது)

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## 2025- 2026 நிதியாண்டில் சங்கத்திற்காக பெறப்பட்ட பதிவு கட்டணம், வருட சந்தா, பொது நன்கொடை, அவனாசி யாத்திரை நன்கொடை, மகா சிவராத்திரிக்கான நன்கொடை முதலான விவரங்கள்

### சங்க உறுப்பினர்களிடம் பெறப்பட்ட நன்கொடை விவரங்கள் (ரூபாயில்)

| எண் | பெயர் | உறுப்பினர் சந்தா | மகா சிவராத்திரி சந்தா | மகா சிவராத்திரி நன்கொடை | அவனாசி யாத்திரை நன்கொடை | பொது நன்கொடை | 2026-2027 சந்தா | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர் N சுகுமாரன் | 2,000 | 1,000 | 15,000 | 5,000 | | | 23,000 |
| 2 | டாக்டர் M N G மணி | 2,000 | 1,000 | 15,000 | 5,000 | | | 23,000 |
| 3 | டாக்டர் N ராஜன் | 2,000 | 1,000 | 10,000 | 5,000 | | | 18,000 |
| 4 | J சந்திரன் | 2,000 | 1,000 | 2,000 | 5,000 | | | 10,000 |
| 5 | K சந்திரன் | 2,000 | 1,000 | 2,000 | 3,000 | | | 8,000 |
| 6 | K ராமச்சந்திரன் | 2,000 | 1,000 | 10,000 | | | | 13,000 |
| 7 | B ஜோகி | 2,000 | 1,000 | 1,000 | 2,000 | | | 6,000 |
| 8 | K மணி | 2,000 | 1,000 | 2,000 | 2,500 | | 2000 | 9,500 |
| 9 | K நஞ்சுண்டன் | 2,000 | 1,000 | 1,000 | 2,000 | | | 6,000 |
| 10 | B ஆனந்தகுமார் | 2,000 | 1,000 | | 1,000 | | | 4,000 |
| 11 | K அரசு | 2,000 | 1,000 | 1,000 | 2,000 | | | 6,000 |
| 12 | R சிவக்குமார் | 2,000 | 1,000 | 3,000 | | | | 6,000 |
| 13 | J நகுலன் | 2,000 | 1,000 | 2,000 | 1,000 | | | 6,000 |
| 14 | பார்வதி கணேசன் | 2,000 | 1,000 | 1,000 | 1,000 | | | 5,000 |
| 15 | R சுப்பிரமணி | 2,000 | 1,000 | 1,000 | 1,000 | | | 5,000 |
| 16 | R சுனில் குமார் | 2,000 | 1,000 | | 1,000 | | | 4,000 |
| 17 | B பிரபு | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 18 | K K ராமன் | 2,000 | 1,000 | 1,500 | 1,000 | | | 5,500 |
| 19 | B சிவப்பிரகாஷ் | 2,000 | 1,000 | | 1,000 | | | 4,000 |
| 20 | N ராஜேந்திரன் | 2,000 | 1,000 | | 1,000 | | | 4,000 |
| 21 | B ராஜேஷ் | 2,000 | 1,000 | 1,000 | | | | 4,000 |
| 22 | B பீமன் | 2,000 | 1,000 | 1,000 | | | | 4,000 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | R விக்னேஷ் | 2,000 | 1,000 | | 2,000 | | | 5,000 |
| 24 | R ஆனந்தகுமார் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 25 | R செந்தில்குமார் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 26 | M ஸ்ரீபதி | 2,000 | 1,000 | 1,000 | | | | 4,000 |
| 27 | J B சண்முகம் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 28 | B மோகன்ராஜ் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 29 | R ரமேஷ் | 2,000 | 1,000 | 1,000 | 1,000 | 1,000 | | 6,000 |
| 30 | சரஸ்வதி பீமன் | 2,000 | 1,000 | 500 | | | | 3,500 |
| 31 | B சகாதேவன் | 2,000 | 1,000 | 500 | 1,000 | 1 | | 4,501 |
| 32 | L பெள்ளி | 2,000 | 1,000 | 1,000 | 1,000 | | | 5,000 |
| 33 | A மகேஷ் குமார் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 34 | J B சுரேஷ் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 35 | R வினோத் குமார் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 36 | M R சிவகுமார் | 2,000 | 1,000 | | 1,000 | | | 4,000 |
| 37 | B தருமன் | 2,000 | 1,000 | 1,000 | | | | 4,000 |
| 38 | B சுந்தரம் | 2,000 | 1,000 | | 500 | | | 3,500 |
| 39 | பார்வதி ராமன் | 2,000 | 1,000 | | 200 | | | 3,200 |
| 40 | B மணிவேலன் | 2,000 | 1,000 | 300 | | | | 3,300 |
| 41 | J B சிவகுமார் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 42 | R பிரதீப் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 43 | J B சகாதேவன் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 44 | B சத்தியசீலன் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 45 | C சோமசுந்தரம் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 46 | டாக்டர் N சந்தோஷ் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 47 | J கணேஷ் | 2,000 | 1,000 | | 1,000 | | | 4,000 |
| 48 | J ராஜ்குமார் | 2,000 | 1,000 | | | 1 | | 3,001 |
| 49 | M R தினேஷ்குமார் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| 50 | R சிவனேசன் | 2,000 | 1,000 | | | | | 3,000 |
| | **மொத்தம்** | **100,000** | **50,000** | **74,800** | **47,200** | **1,002** | **2000** | **275,002** |

## முக்கிமலை சகோதரிகள் மற்றும் சங்க ஆதரவாளர்களிடம் பெறப்பட்ட நன்கொடை விவரங்கள் (ரூபாயில்)

| எண் | பெயர் | ஊர் | நன்கொடை |
|---|---|---|---|
| 1 | திரு S. ராமகிருஷ்ணன் - ஸ்ரீதேவி | இத்தலார் | 5,000 |
| 2 | திருமதி லைலா சந்திரன் | அட்டுபாயில் | 5,000 |
| 3 | திருமதி பேபி ராமா கவுடர் | நஞ்சநாடு | 3,000 |
| 4 | திரு J நகுலன் | பேலிதளா | 3,000 |
| 5 | திருமதி சூர்யா விக்ரம் | நுந்தளா | 2,000 |
| 6 | திருமதி சோனா ஆனந்த் | நஞ்சநாடு | 2,000 |

| | | | |
|---|---|---|---|
| 7 | திருமதி ராஜம்மாள் சந்திரன் | பெம்பட்டி | 2,000 |
| 8 | திருமதி சந்திரம்மா ராமன் | கன்னேரி | 1,000 |
| 9 | திருமதி நிஷாந்தி ஆனந்த் | மணிஅட்டி | 1,000 |
| 10 | திருமதி பிரமிதா உதயகுமார் | கன்னேரி | 1,000 |
| 11 | திருமதி தேவிகா ரமேஷ் | இத்தலார் | 1,000 |
| 12 | திருமதி ஸ்ருதி அரவிந்த் | இட்டக்கல் | 1,000 |
| 13 | திருமதி உஷா ராஜன் | கொடலட்டி | 1,000 |
| 14 | திரு பிரனேஷ் சண்முகம் | முக்கிமலை | 1,000 |
| 15 | திரு S. நரேஷ் | முக்கிமலை | 1,000 |
| 16 | திருமதி அம்பிகா ஆனந்த் | இத்தலார் | 1,000 |
| 17 | திருமதி மீனாட்சி மூர்த்தி | பனஅட்டி | 1,000 |
| 18 | செல்வி தீக்ஷா சகாதேவன் | முக்கிமலை | 1,000 |
| 19 | திருமதி வித்யா முருகேஷ் | பெம்பட்டி | 500 |
| 20 | திருமதி ஜெயந்திமாலா சிவாஜி | தங்காடு | 500 |
| 21 | திருமதி உமா சிவக்குமார் | அட்டுப்பாயில் | 500 |
| 22 | திருமதி தீபா குணா | மணிஅட்டி | 500 |
| 23 | திருமதி தேவி அக்கா | போர்த்தி | 500 |
| 24 | திருமதி மல்லு மம்மி | இத்தலார் | 500 |
| 25 | திருமதி தேவகி ஐயப்பன் | முள்ளிகூர் | 200 |
| 26 | திருமதி லட்சுமி கிருஷ்ணன் | முள்ளிமலை | 200 |
| | **மொத்தம் (பெண்கள் மட்டும் ஆதரவாளர்கள்)** | | **36,400** |

## வரவு செலவு விபரங்கள் 2025-2026 நிதியாண்டு (1-4-2025 – 31-3-2026)

| எண் | வரவு | தொகை (ரூபாயில்) | எண் | செலவு | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1-4-2025 கணக்கிற்கு எடுத்துச் சென்ற உபரித்தொகை | 20,499 | 1 | ஊர் செலவுகளுக்காக கொடுத்த முன் பணம் | 10,000 |
| 2 | வருட சந்தா | 100,000 | 2 | கல்வி உதவித்தொகை | 5,000 |
| 3 | மகா சிவராத்திரி சந்தா | 50,000 | 3 | மருத்துவ உதவித் தொகை | 35,000 |
| 4 | மகா சிவராத்திரி நன்கொடை | 74,800 | 4 | பயணச் செலவுகள் - இறுதியாத்திரைகளில் பங்கு கொள்ள | 24,650 |
| 5 | அவிநாசி யாத்திரை நன்கொடை | 47,200 | 5 | பயணச் செலவுகள் - கூட்டங்களில் பங்கு கொள்ள | 22,900 |
| 6 | பொது நன்கொடை | 1,002 | 6 | பயணச் செலவுகள் - விழாக்கள் மற்றும் யாத்திரை | 52,500 |
| 7 | பிற (2026-2027 சந்தா) | 2,000 | 7 | விழா, யாத்திரை சம்பந்தப்பட்ட உணவு செலவுகள் | 70,403 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | பெண்கள் மற்றும் ஆதரவாளர்கள் நன்கொடை | 36,400 | 8 | பூஜை சம்பந்தப்பட்ட செலவுகள் | 25,293 |
| 9 | சேமிப்பு கணக்கில் பெற்ற வட்டி | 8,433 | 9 | விழாக்களுக்காக ஊரில் மேற்கொண்ட பணிகள் | 14,915 |
| 10 | வைப்பு நிதியில் முதிர்ச்சி அடைந்த தொகை | 1,518,381 | 10 | அங்கத்தினர் குடும்ப இறுதியாத்திரை செலவுகள் | 36,552 |
| 11 | ஊரிலிருந்து பெற்ற காணிக்கை | 11,883 | 11 | ஊர் கோவில்கள் கதவுகள் அமைக்க பங்களிப்பு | 25,000 |
| 12 | பொருட்கள் வகையில் திரும்ப பெற்ற தொகை | 4,690 | 12 | வங்கி கட்டணம் | 59 |
| | | | 13 | தணிக்கை சம்பந்தப்பட்ட செலவுகள் | 18,000 |
| | | | | வைப்பு நிதி | 1,500,000 |
| | | | | **மொத்த வைப்பு நிதி+செலவு** | **1,840,272** |
| | | | | வங்கியில் இருக்கும் தொகை | **35,016** |
| | **மொத்தம்** | **1,875,288** | | **மொத்தம்** | **1,875,288** |

**ஒப்பம்/** **தேதி: 14-4-2026**

***Original document Signed by the following officer bearers and Patrons***

**திரு *J* சந்திரன்**
**சங்கத் தலைவர்**

**திரு *K* சந்திர கவுடர்**
**ஊர் தலைவர்**

**டாக்டர் *N* சுகுமாரன்**
**தலைவர், நிதி நிலை குழு**

**திரு *R* சுப்பிரமணி**
**சங்க செயலாளர்**

**திரு *B* சகாதேவன்**
**சங்க பொருளாளர்**

**திரு *D* போஜன்**
**உறுப்பினர், நிதி நிலை குழு**

**திரு *L* பெள்ளி**
**உறுப்பினர், நிதி நிலை குழு**

**திரு *K* அரசு**
**உறுப்பினர், நிதி நிலை குழு & சங்க உப தலைவர்**

**டாக்டர் *M N G* மணி**
**தலைவர், சங்க மேலாண்மை குழு**

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்

## *20-4-2025*

சங்கத்தின் ஏப்ரல் மாத நிர்வாக குழு கூட்டம் 20-4-2025 அன்று ஆன்லைன் மற்றும் நேர் சந்திப்பு முறையில் மாலை 3 மணி முதல் 4 மணி வரை நடத்தப்பட்டது. பெருவாரியான உறுப்பினர்கள் நேர் சந்திப்பிலும், மற்ற நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆன்லைன் முறையிலும் கலந்து கொண்டனர்.

முதன்முதலாக ஆன்லைன் முறையில், தொலைபேசி மூலம் கூட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டு, நேரில் வந்த அங்கத்தினர்கள் ஒரு குழுவாக, மற்ற உறுப்பினர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டனர். சில உறுப்பினர்கள் தொடர்பு கொள்ள முடிந்தாலும் மற்றும் சிலர் தகுந்த இணைய சேவைகள் இல்லாததால் கலந்து கொள்ள முடியவில்லை என்றும், கூட்ட தீர்மானங்களுக்கு அவர்கள் ஒப்புதல் உண்டு என்பதனையும் தெரிவித்தனர்.

அங்கத்தினர்களின் நேர் சந்திப்பு கோயமுத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் மாலை 2.30 மணி முதல் 4.30 பணி வரை நடைபெற்றது. நேரில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு.

திரு J. சந்திரன் – தலைவர்
திரு K. அரசு - உப தலைவர்
திரு R. சுப்பிரமணி – செயலாளர்,
திரு B. சகாதேவன் – பொருளாளர்
திரு J. கணேஷ் – இணைப்பொருளாளர்
திரு K. நஞ்சுண்டன் – புரவலர்
திரு K. மணி - புரவலர்
திரு M N G மணி – புரவலர்
திரு N. சுகுமாரன் – புரவலர்



நிர்வாக குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அங்கத்தினர்களையும் சங்கத்தின் தலைவர் திரு J. சந்திரன் அவர்கள் வரவேற்றார். தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. சங்கத்தின் 2024-25 நிதியாண்டு வரவு-செலவு கணக்குகள் ஏற்கனவே சங்க உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன. நிர்வாகக் குழு குறித்த நேரத்தில் மிகவும் விரிவான நிதிநிலை அறிக்கை தயாரித்ததற்கு அநேக உறுப்பினர்கள் பாராட்டுகள் தெரிவித்திருக்கின்றனர் என்பதும் பகிரப்பட்டது. இந்த நிர்வாக குழு, பொருளாளர் மற்றும் நிதி நிலை குழு சமர்ப்பித்த கீழ்க்கண்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கியது.

**2024- 2025 நிதியாண்டில் சங்கத்திற்காக பெறப்பட்ட பதிவு கட்டணம், வருட சந்தா, பொது நன்கொடை, மயானத்திற்கான நன்கொடை, மகா சிவராத்திரிக்கான நன்கொடை முதலான விவரங்கள்**

**வரவு செலவு விபரங்கள் 2024-2025 நிதியாண்டு (2-6-2024 – 31-3-2025)**

| எண் | வரவு | தொகை (ரூபாயில்) | எண் | செலவு | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1 | பதிவு கட்டணம் | 25,000 | 1 | நிரந்தர வைப்பு நிதி | 15,00,000 |
| 2 | வருட சந்தா | 60,000 | 2 | மயானத்திற்கு பங்களிப்பு தொகை | 1,00,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | பொது நன்கொடைகள் | 13,54,851 | 3 | கல்வி உதவித் தொகை - S ரினிதா | 5,000 |
| 4 | மயானத்திற்கான நன்கொடைகள் | 2,66,800 | 4 | மருத்துவ உதவித் தொகை - N ராஜேந்திரன் | 5,000 |
| 5 | மகா சிவராத்திரி நன்கொடைகள் | 1,28,100 | 5 | மருத்துவ உதவித் தொகை - B பீமன் | 5,000 |
| 6 | மாதாந்திர வட்டி | 1,708 | 6 | மருத்துவ உதவித் தொகை – K ராமச்சந்திரன் | 5,000 |
| 7 | சிவராத்திரி பொருட்கள் திரும்ப பெற்ற வகையில் | 2,700 | 7 | மருத்துவ உதவித் தொகை - MR சிவக்குமார் | 5,000 |
| 8 | ஆம்புலன்ஸ் கட்டணம் திரும்ப பெற்ற வகையில் | 500 | 8 | மருத்துவ உதவித் தொகை - K சந்திரன் | 5,000 |
| 9 | சிவராத்திரிக்கு சேர்ந்த காணிக்கை | 5,200 | 9 | மருத்துவ உதவித் தொகை - J நகுலன் | 5,000 |
| 10 | மகா சிவராத்திரி விழா சீரியல் செட் வாடகை வகையில் | 500 | 10 | மருத்துவ உதவித் தொகை - C சோமசுந்தரம் | 5,000 |
| | | | 11 | வண்டி வாடகை - குண்டியம்மாள் மறைவு | 3,500 |
| | | | 12 | வண்டி வாடகை - சங்க கூட்டம் - 12-1-2025 | 3,500 |
| | | | 13 | ஊர் - பொது செலவுகள் | 5,000 |
| | | | 14 | ஊர் - மயான செலவுகள் | 1,500 |
| | | | 15 | வண்டி வாடகை - கிண்ணகொரை ஜானகி அம்மாள் மறைவு | 10,000 |
| | | | 16 | மகா சிவராத்திரி பூஜை - நிரந்தர பொருட்கள் | 32,686 |
| | | | 17 | மகா சிவராத்திரி பூஜை – அலங்காரம் | 6,230 |
| | | | 18 | மகா சிவராத்திரி பூஜை - உணவு | 34,025 |
| | | | 19 | மகா சிவராத்திரி பூஜை - உணவு தயாரிப்பு | 22,500 |
| | | | 20 | மகா சிவராத்திரி பூஜை – பொது | 1,125 |
| | | | 21 | மகா சிவராத்திரி பூஜை - பூஜை சாமான்கள் | 7,235 |
| | | | 22 | மகா சிவராத்திரி பூஜை – போக்குவரத்து | 18,200 |
| | | | 23 | கோவில் பூஜாரி சன்மானம் | 1,000 |
| | | | 24 | மணியட்டி கும்பாபிஷேகம் | 500 |
| | | | 25 | N மாதன் ஈமச்சடங்கு -உணவு | 16,839 |
| | | | 26 | N மாதன் ஈமச்சடங்கு – மயானம் | 7,100 |
| | | | 27 | N மாதன் ஈமச்சடங்கு – வேலையாட்கள் | 1,600 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 28 | *N* மாதன் ஈமச்சடங்கு - சிற்றுண்டி வகை | *3,120* |
| | | | 29 | *N* மாதன் ஈமச்சடங்கு – போக்குவரத்து | *5,800* |
| | | | 30 | வாகன செலவு - *15-3-2025* கூட்டத்தில் பங்கேற்க | *3,500* |
| | **மொத்த வரவு** (ரூபாயில்) | ***18,45,459*** | | **மொத்த வைப்பு நிதி+செலவு** | ***18,24,960*** |
| | குறைப்பு: சாமியானவுக்கு நேரடியாக கொடுத்தது (டாக்டர் *N* சுகுமாரன்) | ***26,000*** | | குறைப்பு: சாமியானவுக்கு நேரடியாக கொடுத்தது (டாக்டர் *N* சுகுமாரன்) | ***26,000*** |
| | வங்கி மூலம் செய்த பரிவர்த்தனை - **வரவு** | ***18,19,459*** | | வங்கி மூலம் செய்த பரிவர்த்தனை - வைப்பு நிதி+செலவு | ***17,98,960*** |
| | **1-4-2025 கணக்கிற்கு எடுத்துச் செல்லும் உபரித்தொகை** | ***20,499*** | | | |

**ஒப்பம்/ தேதி: *31-3-2025***

**திரு *J* சந்திரன்**
சங்கத் தலைவர்

**திரு *K* சந்திர கவுடர்**
ஊர் தலைவர்

**டாக்டர் *N* சுகுமாரன்**
தலைவர், நிதி நிலை குழு

**திரு *R* சுப்பிரமணி**
சங்க செயலாளர்

**திரு *B* சகாதேவன்**
சங்க பொருளாளர்

**திரு *D* போஜன்**
உறுப்பினர், நிதி நிலை குழு

**திரு *L* பெள்ளி**
உறுப்பினர், நிதி நிலை குழு

**திரு *K* அரசு**
உறுப்பினர், நிதி நிலை குழு
& சங்க உப தலைவர்

**டாக்டர் *M N G* மணி**
தலைவர், சங்க மேலாண்மை குழு

# செலவினங்களின் வகைப்பாடு

*2024-2025* நிதியாண்டில், வைப்பு நிதி மற்றும் செலவினங்கள் வகையில் மொத்த தொகை **ரூபாய் *18,24,960*.** இதில் வைப்பு நிதியான **ரூபாய் *15* லட்சத்தை** தவிர்த்த செலவினங்கள் வகையில் மொத்த செலவு **ரூபாய் *3,24,960*.**

இந்த செலவினங்களை நமது சங்கத்தின் நோக்கங்களை முன்னிறுத்தி இறுதியாத்திரை சம்பந்தப்பட்ட செலவினங்கள், கல்வி ஊக்கத் தொகை, அவசர கால மருத்துவ உதவி தொகை, விழாக்கள் சம்பந்தப்பட்டவை, நிர்வாக குழு கூட்டங்கள் சம்பந்தப்பட்டவை, சொத்து வகையில் வாங்கப்பட்ட பொருட்கள், இதர செலவினங்கள் என்று வகைப்படுத்திய செலவினங்கள் கீழே வருமாறு:

| **எண்** | **செலவினங்களில் வகைப்பாடு** | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| *1* | இறுதியாத்திரை சம்பந்தப்பட்ட செலவினங்கள் | ***1,54,459*** |
| *2* | கல்வி ஊக்கத் தொகை | ***5,000*** |
| *3* | அவசர கால மருத்துவ உதவி தொகை | ***35,000*** |
| *4* | விழாக்கள் சம்பந்தப்பட்டவை | ***90,315*** |

| | | |
|---|---|---|
| 5 | நிர்வாக குழு கூட்டங்கள் சம்பந்தப்பட்டவை | 7,000 |
| 6 | சொத்து வகையில் வாங்கப்பட்ட பொருட்கள் | 32,686 |
| 7 | இதர செலவினங்கள் | 500 |
| | **மொத்தம்** | 3,24,960 |

நமது ஊரில் இருக்கும் சொந்தங்கள் தவிர மற்றவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் கையொப்பமிட்டனர். இந்த அறிக்கை முறையாக தணிக்கை செய்யப்பட்டு ஆண்டறிக்கையுடன் அரசாங்கத்திற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும்.

2. வரும் காலங்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கண்டிப்பாக நேர் சந்திப்பு நிர்வாகக் குழு கூட்டம் நடைபெற வேண்டும் என்றும், மற்ற கூட்டங்கள் நேர் சந்திப்பு மற்றும் ஆன்லைன் முறையில் நடத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

3. வருடத்திற்கு நடத்தப்படும் நான்கு கட்டாய நேர் சந்திப்பு நிர்வாக குழு கூட்டங்களில், இரண்டு கூட்டங்கள் கோவையிலும் மற்ற இரு கூட்டங்கள் நமது ஊரிலும் நடத்தலாம் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது. ஊரில் நடத்தப்படும் நிர்வாக குழு கூட்டங்களை, ஊர் சார்பாக நடத்தப்படும் கலாச்சார விழாக்கள் வரும் தேதிகளில் நடத்தும் பொழுது நமது சொந்தங்கள் அந்த கலாச்சார விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் இருக்கும் என்றபடியால் ஞாயிறு அல்லது விடுமுறை நாட்களில் இந்த இரு கூட்டங்கள் நிகழாமல் இருக்கலாம் என்பதையும் உறுப்பினர்கள் நினைவு கூர்ந்தனர்.

4. இந்த இரு கூட்டங்களை தவிர்த்து வருங்காலத்தில் வரும் நிர்வாக குழு கூட்டங்கள் கூடுமானவரை ஞாயிற்றுக்கிழமை நடத்தும் பொழுது இன்னும் பல உறுப்பினர்கள் கலந்து கொள்ள ஏதுவாக இருக்கும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

5. 26-2-2025-ல் ஊரில் நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவிற்கு தொடர்ந்து பாராட்டுதல் பல ஊர்களில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன என்பதை அங்கத்தினர்கள் பதிவு செய்தனர். இதை கருத்தில் கொண்டு ஏற்கனவே பரிந்துரைத்தது போல, ஒவ்வொரு வருடமும் மகா சிவராத்திரி விழாவை விமரிசையாக ஊரில் கொண்டாட வேண்டும் என்றும், ஊரில் நடக்கும் இரண்டு நிர்வாகக் குழு கூட்டங்களில், ஒரு கூட்டம் மகாசிவராத்திரி விழாவுடன் சேர்த்து நடத்தலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. மகாசிவராத்திரி விழா எப்பொழுது வரும் என்பது முன்கூட்டியே அனைவருக்கும் தெரியும் ஆதலால், உறுப்பினர்கள் தயை கூர்ந்து இதற்காக நேரம் ஒதுக்கி வரும்

காலங்களில் விழாவிலும் நிர்வாக குழு கூட்டத்திலும் கலந்து கொள்ள வேண்டும் என்று நிர்வாக குழு சார்பில் கோரிக்கை வைக்கப்படுகின்றது.

6. 2025-26 நிதியாண்டிற்கான வருட சந்தா பெறப்பட்டு கொண்டிருக்கின்றது என்பதை அங்கத்தினர்கள் பதிவு செய்தனர். 20-4-2025 அன்று நடந்த நிர்வாக குழு கூட்ட தேதி வரை 18 உறுப்பினர்கள் தங்கள் வருட சந்தாவான ரூபாய் 2,000 சங்க வங்கி கணக்கிற்கு செலுத்தியிருக்கின்றார்கள் என்ற விவரங்கள் பகிரப்பட்டன. நமது சொந்தங்கள் அவர்களது வருட சந்தாவை வங்கி கணக்கில் கூடிய விரைவில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

7. நமது பிரதான திட்டமான **"வரியில்லா இறுதியாத்திரை"** திட்டத்திற்கு நாம் நினைத்த இலக்குபடி நிதி திரட்டி அது வைப்பு நிதியில் இருப்பதால், வரும் காலங்களில் நம் சந்ததிகளுக்கும் இது உதவியாக இருக்கும் என்பதை மறுபடியும் அங்கத்தினர்கள் நினைவுகூர்ந்தனர். இந்த வைப்பு நிதியானது இறுதியாத்திரைக்கு மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும் என்ற நினைவூட்டலை எல்லா சொந்தங்களிடமும் பகிர வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. எந்த காலகட்டத்திலும் வைப்பு நிதியிலிருந்து மற்ற விழாக்களுக்கு செலவிடக்கூடாது என்ற விதி மீண்டும் பதிவு செய்யப்பட்டது. மற்ற எந்த விழாவானாலும் அவற்றை நன்கொடை மூலமாக நடத்தலாம் என்பதையும் நிர்வாக குழு பதிவு செய்தது.

8. நம் சொந்தங்கள் அனைவரும் அவிநாசியில் அமைந்திருக்கின்ற அருள்மிகு அவிநாசியப்பர் சிவ ஸ்தலத்திற்கு ஆன்மீக யாத்திரை சென்று வரலாம் என்ற கருத்துரை முன்வைக்கப்பட்டது. முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கக்கூடிய முக்கியமான கோயிலாக விளங்குகின்ற, மற்றும் தேவார பாடல் பெற்ற 276 ஸ்தலங்களில் ஒன்றாக கருதப்படுகின்ற, முதன்மை நாயனாரான சுந்தரமூர்த்தி நாயனார் தன் பதிகம் மூலம் இறந்த குழந்தைக்கு உயிர் வரவழைத்த ஸ்தலமாக கருதப்படுகின்ற இந்த பெருமைமிகு சிவன் கோயிலுக்கு செல்வது அனைவருக்கும் பாக்கியம் என்பதை உறுப்பினர்கள் நினைவுகூர்ந்தனர்.

   இந்த பயணத்திற்கு எல்லோரையும் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை என்றும், விருப்பம் உள்ளவர்கள் இந்த கூட்டு பயணத்திற்கு எவ்வளவு கட்டணம் ஆகின்றதோ அதை சமமாக பகிர்ந்து, ஆன்மீக பயணத்தில் கலந்து கொள்ளலாம் என்றும் உத்தேசிக்கப்பட்டது. வெயில் குறைந்து ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் ஒரு நாள் இந்த பயணத்திற்கான திட்டம் தீட்டி அங்கத்தினர்களிடம் அவர்கள் விருப்பத்தை கேட்கலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

9. 2024 வது வருடம் ஆகஸ்ட் மாதம் 11 ஆம் தேதி வீரபாண்டி மீரா மஹாலில் சங்கத்தின் முதல் துவக்க விழா நடைபெற்றது அனைவரது மனதிலும் நீங்கா இடம் பெற்றிருக்கின்றது என்பது நிதர்சனம். அந்த நிகழ்வில் குறிப்பிட்டது போல ஒவ்வொரு வருடமும் நமது உறுப்பினர்கள் மற்றும் அவர் சொந்தங்கள் என

அனைவரையும் அழைத்து இதை ஒரு குடும்ப விழாவாக நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டதை தொடர்ந்து, இந்த ஆண்டும் இந்த விழா நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றிய விவரமான திட்டம் வரும் நிர்வாக குழுவில் ஆராய்ந்து பின்பு அங்கத்தினர்களுடன் பகிரப்படும்.

முதல் நிதியாண்டில் சங்கத்தின் அறிக்கை எப்படி தயாரிக்க வேண்டும், நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முறை, இணையதளம் நடைமுறைப்படுத்துவது, வாட்ஸ் அப் குரூப் நடைமுறைப்படுத்துதல் போன்ற நிர்வாக கட்டமைப்பு நிகழ்வுகள் சீராக நடைபெற்றிருப்பது, எதிர்காலங்களில் சங்கத்தை ஏற்று நடத்தும் அன்பர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும் என்பதையும் நிர்வாக குழு உறுப்பினர்கள் பதிவு செய்தனர்.

சங்கத்தின் முதல் ஆண்டில் அத்தனை உறுப்பினர்களும் சங்கத்தின் சித்தாந்தத்தை முன்னிறுத்தி, ஒவ்வொரு நிகழ்விலும் **தன்னலமற்ற சேவை** செய்ததை நிர்வாக குழு மிகவும் பாராட்டியது. சங்க உறுப்பினர்களின் **ஒற்றுமை,** மற்றும் **"முக்கிமலைகாகி முக்கிமலையவக்க"** என்ற **சித்தாந்தத்தில் கொள்கை பிடிப்பு** ஆகியவை அனைவரும் ஒற்றுமையாக இருப்பதற்கு அடித்தளம் அமைத்திருக்கின்றது என்பதை அனைவரும் பாராட்டினார். இதேபோன்று நமது சங்க உறுப்பினர்கள் எந்த காலத்திலும் தன்னலமற்று, ஒற்றுமையுடன் வாழ்ந்து, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதையும் கூட்டம் பதிவு செய்தது.

ஒரு வருட காலத்தில் நடந்திருக்கும் நிகழ்வுகள் கடவுளால் நமக்கு வழி வகுக்கப்பட்டவை என்பதை நினைவில் நிறுத்தி வரும் காலங்களிலும் சங்கம் இன்னும் சிறப்பாக நடக்க வேண்டும் என்று நிர்வாக குழு உறுப்பினர்கள் பிரார்த்தனை செய்தனர்.

சங்கத்தின் உப தலைவர் திரு *K.* அரசு அவர்கள் நன்றி தெரிவிக்க நிர்வாக குழு கூட்டம் இனிதாக நடந்தேறியது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## *18-5-2025*

சங்கத்தின் மே மாத நிர்வாக குழு கூட்டம் 18-5-2025 அன்று ஆன்லைன் மற்றும் நேர் சந்திப்பு முறையில் மாலை 3 மணி முதல் 4 மணி வரை நடத்தப்பட்டது.
ஆன்லைன் முறையில் சிலர் தொடர்பு கொண்டாலும், பல அங்கத்தினர்கள் தொடர்பு கொள்ள முடியவில்லை. இருப்பினும் பலர் சங்க தீர்மானங்களுக்கு தங்கள் ஒப்புதல் வழங்குவதாக தெரிவித்தனர்.

அங்கத்தினர்களின் நேர் சந்திப்பு கோயமுத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் மாலை 2.30 மணி முதல் 4.30 பணி வரை நடைபெற்றது. நேரில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு.

திரு J. சந்திரன் – தலைவர்
திரு K. அரசு - உப தலைவர்
திரு R. சுப்பிரமணி – செயலாளர்,
திரு B. சகாதேவன் – பொருளாளர்
திரு K. நஞ்சுண்டன் – புரவலர்
திரு B ஜோகி- புரவலர்
திரு M N G மணி – புரவலர்
திரு B ஆனந்தகுமார் - உறுப்பினர்



கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, நமது ஊரில் சமீபத்தில் இறைவனடி சேர்ந்த திருமதி ஜானி ஆரி அவர்களுக்கும், நமது முக்கிமலை சகோதரி திருமதி சரோஜி அம்மாள் (ஒசஹட்டி) அவர்களுக்கும் அனைவரும் மவுன அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து, சங்கத்தின் தலைவர் திரு *J* சந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்று, வரும் மாதங்களில் எவ்வித நிகழ்வுகள் நடத்தலாம் என்பதற்கு அங்கத்தினர்களின் ஆலோசனையை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் நடந்த கலந்துரையாடலின் சுருக்கமும், பரிந்துரைக்கப்பட்ட தீர்மானங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### உறுப்பினர் வருட சந்தா:

*கூட்டம் நடந்த 18-5-2025 வரை சங்கத்தின் 24 உறுப்பினர்கள் தங்களது முழு வருட சந்தாவையும் செலுத்தி இருக்கின்றனர் என்ற தகவல் பகிரப்பட்டது. அந்த உறுப்பினர்கள் வருமாறு:*

1. *T1 - MNG மணி,*
2. *T2 - K ராமச்சந்திரன்,*
3. *T2 - R பிரதீப்,*
4. *T3 - Dr N ராஜன்,*
5. *T4 - Dr N சுகுமாரன்,*
6. *T5 - J சந்திரன்*
7. *T5 - C சோமசுந்தரம்,*
8. *T6 - K சந்திர கவுடர் ,*
9. *T7 - B ஆனந்தகுமார்,*
10. *T8 – L பெள்ளி ,*
11. *T9 - K நஞ்சுண்டன்,*
12. *T10 - KK ராமா கவுடர்,*
13. *T12 - B ஜோகி,*
14. *T13 - J ரவிக்குமார்,*
15. *T14 - K அரசு,*
16. *T14 - A மகேஷ் குமார்,*
17. *T15 - K மணி,*
18. *T16 - R சுப்பிரமணி,*
19. *T17 - B பீமன்,*
20. *T17 - B ராஜேஷ்,*
21. *T18 - B பிரபு,*
22. *T19 – J B சண்முகம்*
23. *T20 - பார்வதி கணேசன்*
24. *T21 - B சகாதேவன்*

மற்ற உறுப்பினர்களும் விரைவில் சந்தா செலுத்தும் படி நினைவுறுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## வருடாந்திர ஆண்டு விழா:

நமது சங்கத்தின் பதவியேற்பு விழா 11-8-2024 அன்று வீரபாண்டி மீரா மஹாலில் விமரிசையாக நடைபெற்றது. சங்கம் தொடங்கி சரியாக ஒரு வருடம் முடிவதை முன்னிறுத்தி, இந்த வருடமும் நமது அங்கத்தினர்கள் மற்றும் அவர்களின் குடும்ப சொந்தங்கள் ஒன்று சேரும் வகையில் 10-8-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று வீரபாண்டி மீரா மஹாலில் ஆண்டு விழா நடத்தலாம் என்று உத்தேசிக்கப்பட்டது. மகா சிவராத்திரி விழா ஒவ்வொரு வருடமும் நமது ஊரில் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை தொடர்ந்து, வருடாந்திர ஆண்டு விழா கோவையில் நடத்தலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. அங்கத்தினர் அனைவரும் ஆகஸ்ட் 10 ஆம் தேதி தங்கள் குடும்பத்துடன் இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விழா பற்றிய விவரங்கள் வரும் நாட்களில் திட்டமிடப்படும்.

## கல்வி உதவித்தொகை:

நமது கல்வி உதவித் தொகை மூலம், மேல்நிலைப்பள்ளி முடிக்கும் குழந்தைகளுக்கு ரூபாய் 5,000 உதவித்தொகை வழங்கலாம் என்ற திட்டம் பற்றி அனைவரும் அறிவீர்கள். பிளஸ் 2 படிக்கும் குழந்தைகள் அந்த வருடம் இல்லை என்றால், மற்ற பகுப்புகளில் படிக்கும் குழந்தைகளும் இந்த திட்டத்திற்கு தேர்வு செய்யலாம் என்று ஏற்கனவே முடிவு செய்ததன்படி, எட்டாவது வகுப்பு முதல் பன்னிரண்டாவது வகுப்பு வரை உங்கள் குழந்தைகள் படித்துக் கொண்டிருந்தால், அந்த தகவலை சங்க செயலாளருக்கு தெரிவிக்கவும். பெறப்படும் விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி மற்றும் நிதி மேலாண்மை குழு, உதவி தொகைக்கான தேர்வு செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கோவில் தரிசனம்:

நமது ஆண்டு விழா நடப்பதற்கு முன்பாக, அவிநாசியில் உள்ள அருள்மிகு அவினாசிலிங்கேஸ்வரர் கோயிலுக்கு நமது அங்கத்தினர்கள் சென்று, நமது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கும் பூஜை நடத்தி, நமது நன்றி கடனை செலுத்தலாம் என்பது பெரும் வாரியான அங்கத்திரங்களின் கோரிக்கையாக உள்ளது. காலையில் புறப்பட்டு கோயிலுக்கு 10 மணிக்கு முன்பாக சென்று, அன்று மதியம் 12 மணிக்கு முன்பாக பூஜை நடத்தி, மதிய உணவு உண்டு, பின்பு நம் இல்லங்களுக்கு திரும்பலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது. அனைவருக்கும் வசதியாக 13-7-2025 ஞாயிற்றுக்கிழமை, அன்று இந்த கோயில் தரிசனம் மேற்கொள்ளலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

நமது முக்கிமலை ஊர் மற்றும் கோவையிலிருந்து செல்லும் நண்பர்களுக்கு வாகன வசதியும் ஏற்பாடு செய்யப்படும். கோயில் என்பதால் அன்பர்கள் தங்களால் முடிந்த காணிக்கையும் இந்த பயணத்துக்கு செலுத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த

பிரயாணம் பற்றிய முழு விபரங்கள் வரும் வாரங்களில் தீர்மானிக்கப்படும். அனைத்து அங்கத்தினர்களும் பங்கேற்க வேண்டும் என்பதே சங்கத்தின் வேண்டுகோள்.

இருப்பினும் சரியான திட்டமிடுவதற்காக, உங்கள் இல்லத்தில் இருந்து எத்தனை பேர் இந்த கோவில் தரிசனத்தில் கலந்து கொள்கின்றீர்கள் என்ற தகவலை சங்கப் பொருளாளர் திரு *B* சகாதேவன் அவர்களுக்கு ஜூன் மாத முதல் வாரத்திற்குள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### ஜூலை மாத நிர்வாக குழு கூட்டம்:

நமது நிர்வாக குழு கூட்டம் அவ்வப்பொழுது நமது ஊரில் நடத்தலாம் என்பது ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டது. அதுவும் முக்கியமான கலாச்சார விழாக்களுடன் சேர்த்து நடக்கும் பொழுது, அங்கத்தினர்கள் அந்த விழாவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைக்கும் என்றும் பெருவாரியான அங்கத்தினர்கள் குறிப்பிட்டனர். *23-7-2025* அன்று நமது ஊரில் தெவ்வா பண்டிகை நடக்கின்றது. அன்றைய நாளில் நமது அங்கத்தினர்கள் ஊரில் கோயிலில் தரிசனம் செய்து, பின்பு கூட்டம் நடத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. காலையில் ஊருக்கு சென்று, மாலை கோவை திரும்புவதற்கான வாகன வசதியும் செய்யப்படும். *23-7-2025* ஞாயிற்றுக்கிழமை இல்லை என்றாலும், இந்த விழாவின் முக்கியத்துவம் கருதி அன்றைக்கு கூட்டம் நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. நேரில் கலந்து கொள்ள முடிந்த நிர்வாக குழு அங்கத்தினர்கள் செயலாளரை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள், இன்டர்நெட் வலிமையை பொறுத்து, ஆன்லைன் முறையிலும் கலந்து கொள்ளலாம்.

### செலவினங்களுக்கு ஒப்புதல்:

நிர்வாக குழு கீழ்க்கண்ட செலவினங்களுக்கு ஒப்புதல் வழங்கியது:

*4-5-2025* கோவில் பூஜை – ரூபாய் *465*
*4-5-2025* ரத நிகழ்வுக்கு செலவினங்கள் – ரூபாய் *1,300*
*4-5-2025* ரத நிகழ்வில் செலுத்திய காணிக்கை – ரூபாய் *500*
தூனேரி கோவில் கும்பாபிஷேகத்திற்கு செலுத்திய காணிக்கை – ரூபாய் *500*
ஒசஹட்டி சரோஜி அம்மாள் மறைவிற்கு ஊர் அங்கத்தினர்கள் கலந்து கொண்ட வண்டி வாடகை – ரூபாய் *1,000*
ஒசஹட்டி சரோஜி அம்மாள் மறைவிற்கு கோவை அங்கத்தினர்கள் கலந்து கொண்ட வண்டி வாடகை – ரூபாய் *3,800*
முக்கியமான செலவினங்களுக்காக ஊர் சொந்தங்களுக்கு அளிக்கப்பட்ட முன்பணம் - ரூபாய் *5,000*

இந்த செலவினங்கள் மற்றும் ஊருக்கு கொடுக்கப்படும் முன் பணம் போக, சங்கத்தின் வங்கி கணக்கில் ரூபாய் *55,935* இருக்கும்.

**வைப்பு நிதிக்கான வட்டி:**

நமது வைப்புத்தொகை *15* லட்சம் ஆனது சென்ற நிதியாண்டில் ஐந்து தவணைகளில் வங்கிக்கு செலுத்தி இருக்கின்றோம். அதன் விவரங்கள் வருமாறு: *14-8-2024 - 5* லட்சம், *21-8-2024 - 5* லட்சம், *20-9-2024 - 2* லட்சம், *15-10-2024 - 2* லட்சம், *17-1-2025 - 1* லட்சம். இந்த ஐந்து தவணை வைப்புநிதிகளில், முதல் நான்கு வைப்பு நிதிகளும், இந்த நிதியாண்டு *2025-2026* இல் முதிர்ச்சி பெறுகிறது. அதன் மூலம் இந்த நிதியாண்டில் நமது சங்கத்திற்கு ரூபாய் *1,31,820* வட்டி தொகை கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நிதியாண்டு நமது வங்கி கணக்கில் பெறப்படும் வட்டி விவரங்கள் வருமாறு: *15-11-2025 -* வட்டி ரூபாய் *47,094, 22-11-2025 -* ரூபாய் *47,094, 21-12-2025 -* ரூபாய் *18,838, 15-1-2026 -* ரூபாய் *18,794.*

ஐந்தாவது வைப்பு நிதியான ரூபாய் ஒரு லட்சத்திற்கு *17-4-2026* அன்று வட்டியாக ரூபாய் *9,397* பெறப்படும். இந்த வைப்பு நிதி மேற்கண்ட தேதிகளில் முதிர்ச்சி அடையும் பொழுது, தேவையான செலவினங்களை தாண்டி, உபரியாக இருக்கும் தொகையை மீண்டும் வைப்பு நிதியில் சேர்க்கும் பொழுது, ஒவ்வொரு வருடமும் சங்கத்திற்கு கிடைக்கும் வட்டியானது சங்கத்திற்கு வலிமை சேர்க்கும் என்பதையும் அங்கத்தினார்கள் குறிப்பிட்டனர்.

சங்கத்தின் உப தலைவர் திரு *K.* அரசு அவர்கள் நன்றி தெரிவிக்க நிர்வாக குழு கூட்டம் இனிதாக நடந்தேறியது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## *15-6-2025*

சங்கத்தின் ஜூன் மாத நிர்வாக குழு கூட்டம் *15-6-2025* அன்று நேர் சந்திப்பு முறையில் பெரியநாயக்கன்பாளையம் குன்னாமை நிலையத்தில் காலை *11* மணி முதல் மதியம் *3* மணி வரை நடந்தது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு.

**முக்கிமலை வாழ் உறுப்பினர்கள்**

திரு *K.* சந்திரா கவுடர் - ஊர் தலைவர்
திரு *D.* போஜன் - சங்க உறுப்பினர்
திரு *L.* பெள்ளி - சங்க உறுப்பினர்
டாக்டர் *N.* ராஜன் - சங்க உறுப்பினர்
திரு *J* நகுலன் - சங்க உறுப்பினர்
திரு *B.* சுந்தரம் - சங்க உறுப்பினர்
திரு *R.* சுகுமார் (திரு *KK* ராமா கவுடர்) - சங்க உறுப்பினர்
திரு *R* தினேஷ்குமார் - சங்க உறுப்பினர்
திரு *B* சத்தியசீலன் - சங்க உறுப்பினர்

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

திரு *J.* சந்திரன் – தலைவர்
திரு *K.* அரசு - உப தலைவர்
திரு *R.* சுப்பிரமணி – செயலாளர்,
திரு *B.* சகாதேவன் – பொருளாளர்
திரு *J* கணேஷ் - இணைப்பொருளாளர்
திரு *K.* ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு *K.* நஞ்சுண்டன் – புரவலர்
திரு *B.* ஜோகி – புரவலர்
திரு *K.* மணி - புரவலர்
திரு *M N G* மணி – புரவலர்
திரு *J.B.* சண்முகம் - சங்க உறுப்பினர்
திரு *B* ஆனந்தகுமார் - சங்க உறுப்பினர்

புரவலர் டாக்டர் N சுகுமாரன், திரு R. சிவகுமார் - இணை செயலாளர், திரு B. மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர், திரு M.R. சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.



சங்கத்தின் தலைவர் திரு J சந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து நடந்த கலந்துரையாடலின் சுருக்கமும், பரிந்துரைக்கப்பட்ட தீர்மானங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**சந்தா மற்றும் இருப்பு தொகை:** 15-6-2025 ஆம் தேதி வரை மொத்தம் உள்ள 49 அங்கத்தினர்களில், 38 பேர் தங்களது வருட சந்தாவை செலுத்தி இருக்கின்றனர் என்ற தகவல் பகிரப்பட்டது. மீதி இருக்கும் அங்கத்தினர்கள் தங்களது சந்தாவை கூடிய விரைவில் செலுத்துமாறு நிர்வாக குழு கேட்டுக்கொண்டது. 15-6-2025 அன்று, நிர்வாக குழு கூட்டம் நடக்கும் பொழுது, நமது வங்கியின் இருப்பு தொகை ரூபாய் 91,935 என்ற தகவலும் பகிரப்பட்டது.

**அங்கத்தினர்களிடம் செய்தி பரிமாற்றத்தின் முக்கியத்துவம்:** சங்கத்தின் மூலமாக அங்கத்தினர்களுக்கு அனுப்பும் பொது தகவல்களுக்கு அங்கத்தினர்கள் தாங்கள் அதை படித்திருக்கிறோம் என்பதற்கான ஒப்புதலை வாட்ஸ் அப் குறியீடுகள் மூலமாகவோ

அல்லது பதில் மெசேஜ் ஆகவும் தெரிவித்தால் சிறப்பாக இருக்கும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

**ஈமசடங்குகளில் கலந்து கொள்வதில் துரிதமாக முடிவெடுத்தல்:** வரும் நாட்களில், குறிப்பாக ஈமச்சடங்குகள் பற்றி அங்கத்தினர்களிடம் செய்தி பகிரும் பொழுது அதில் அவர்கள் கலந்து கொள்ளுகின்றார்களா இல்லையா என்பதை ஆம் / இல்லை என்ற சுருக்கு பதில் மூலம் தெரிவித்தால் உரிய நேரத்தில் தேவைப்பட்ட வாகன வசதிகள் ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும். வாட்ஸ் அப் உபயோகப்படுத்தாதவர்கள் தலைவர், உபதலைவர் மற்றும் செயலாளரை காலம் தாழ்த்தாமல் தொடர்பு கொண்டு தங்கள் வருகையை பதிவு செய்தால் தேவைப்பட்ட வாகனங்கள் ஏற்பாடு செய்து உரிய நேரத்தில் ஊருக்கு சென்றடைய வசதியாக இருக்கும்.

தொழில்நுட்ப வளர்ச்சியை உபயோகப்படுத்தி இனிவரும் காலங்களில் வாட்ஸ் அப் மற்றும் தொலைபேசி தகவல் பரிமாற்றம் என்பது அங்கத்தினர்களிடையில் நன்கு இருக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

**மயானத்திற்கு சிலிண்டர் வாங்க பரிந்துரை:** கேஸ் மயானத்தில் தகனம் செய்யும் நிகழ்வுகளுக்கு ஊரில் நமது பிரிவிற்கு இரண்டு சிலிண்டர்கள் மயான நிர்வாக குழு மூலம் அளிக்கப்பட்டுள்ளன. எதிர்பாராமல் ஏற்படும் மரண நிகழ்வுகளை சிரமமின்றி நடத்த, நமது சங்க சார்பில் மேலும் இரண்டு சிலிண்டர்கள் சங்க நிதியில் வாங்கி அவற்றை ஊரில் வைத்திருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

**தகனத்தில் எஞ்சியுள்ள சிலிண்டரை உபயோகப்படுத்துதல்:** தகனத்தில் உபயோகப்படும் இரண்டு சிலிண்டர்களில் மீதி இருக்கும் கேஸ் அந்த ஈமச்சடங்கு நடந்த வீட்டிற்கு ஈமச்சடங்கு குறித்த பிற காரியங்கள் நடத்த இனாமாக அளிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அந்த சிலிண்டர்களை முழுமையாக பயன்படுத்திய பின்பு அந்த உறுப்பினர்கள் நமது சங்கத்திற்கு காலி சிலிண்டர்களை திருப்பி அளித்து விடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

**புது சிலிண்டர்கள் வாங்க ஏற்பாடு செய்தல்:** இந்த முக்கியமான பரிந்துரையின் படி ஊரில் நான்கு சிலிண்டர்கள் எப்பொழுதும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. தேவையான சிலிண்டர்கள் வாங்குவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அணுகி, நமது ஊர் சொந்தங்கள் சங்கத்திற்கு தெரிவிக்கும் பொழுது அதற்கான தொகையை காசோலை மூலம் சங்கம் அளிக்கும் என்பதையும் நிர்வாகக்குழு பரிந்துரை செய்தது.

**வருடாந்திர நிதி நிலை பற்றிய கருத்து:** இதைத்தொடர்ந்து வருடாந்திர நிதிநிலை குறித்து விவரமாக கலந்துரையாடல் நடைபெற்றது. வரும் காலங்களில் சந்தா மற்றும் வைப்பு நிதியிலிருந்து வரும் வட்டி தொகை வருடத்திற்கு சுமார் 2 லட்சம் இருக்கும். இந்த

தொகை வரியில்லா இறுதியாத்திரை, மருத்துவ உதவி, கல்வி உதவி, வாகனச் செலவுகள் ஆகியவற்றிற்கு போதுமானதாக இருக்கும் என்று அங்கத்தினர்கள் பதிவு செய்தனர்.

**அங்கத்தினர்களின் கட்டாய பங்களிப்பு இருக்க வேண்டிய சங்க நிகழ்வுகள்:** இதைத்தொடர்ந்து எல்லா அங்கத்தினர்களின் கட்டாய பங்களிப்பு சங்கம் நடத்தும் எந்தவிதமான நிகழ்வுகளுக்கு இருக்க வேண்டும் என்று நீண்ட கலந்துரையாடல் நடந்தது. முடிவில் அங்கத்தினர்கள் ஏகமானதாக சந்தா மற்றும் சிவன் ராத்திரி விழாவிற்கு மட்டும் அனைத்து உறுப்பினர்களின் பங்கு இருக்க வேண்டும் என்றும், இதைத் தாண்டி சங்கம் பரிந்துரைக்கும் மற்ற நிகழ்வுகளுக்கு தேவைப்பட்ட நன்கொடை இருந்தால் நடத்தலாம் என்றும் அது போன்ற நிகழ்வுகளுக்கு எல்லா உறுப்பினர்களும் நிதி அளிக்க வேண்டும் என்ற கட்டாயம் இருக்கக் கூடாது என்பதையும் நிர்வாக குழு உறுதி செய்தது.

**மகா சிவராத்திரியை கொண்டாட நிதி திரட்டல் முறை:** மகா சிவராத்திரி பங்களிப்பு ஒவ்வொரு அங்கத்தினரிடமும் இருக்க வேண்டும் என்பதை முன்னிறுத்தி சிவன் ராத்திரி விழாவிற்கு மட்டும் கட்டாய பங்களிப்புத் தொகையாக ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ரூபாய் *1,000* இருக்க வேண்டும் என்றும் அதற்கு மேல் ஆகும் செலவுகளை, அங்கத்தினர்கள் விரும்பி அளிக்கும் நன்கொடை மூலம் எதிர்கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. சிவன் ராத்திரி மாசி மாதத்தில் வருகின்றபடியால் இதற்கான முன்னெடுப்புகள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**அங்கத்தினர்களுக்கு நிதி சுமை குறைக்கும் பரிந்துரை:** ஆண்டவன் அருளால் மரண நிகழ்வுகள் குறைவாக இருக்கும் பொழுது இந்த ஒதுக்கீட்டில் அனைத்தும் செலவாகாமல் உபரி தொகையும் இருக்கலாம் என்பதும் குறிப்பிடப்பட்டது. இதனை சங்கம் ஆரம்பித்த ஒரு ஆண்டில் நாம் உறுதி செய்து இருப்பது ஒரு சாதனை என்பதை அனைவரும் பாராட்டினர். இந்த அத்தியாவசிய நிதி ஒதுக்கீடு தவிர, மற்ற நிகழ்வுகளை சங்கம் பரிந்துரைக்கும்பொழுது அங்கத்தினர்களுக்கு அதிக நிதி சுமை இல்லாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டது. இப்படிப்பட்ட முக்கியமான தீர்மானத்தை முன்னிறுத்தி மகா சிவராத்திரி விழாவை தாண்டி எந்த பொது விழாக்கள் ஒவ்வொரு வருடத்திலும் நடத்தலாம் என்பதை அவ்வப்பொழுது நிர்வாக குழு பரிந்துரைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**ஆண்டு விழா பற்றிய பரிந்துரை:** இதைத்தொடர்ந்து இரண்டாவது ஆண்டு விழா கோயமுத்தூரில் நடத்தலாமா என்று ஆலோசனை செய்யப்பட்டது. முதல் ஆண்டு பதவியேற்பு விழாவினை தொடர்ந்து, இரண்டாவது ஆண்டு விழாவினை நடத்த தாம் தேவையான உதவி செய்ய முன் வருவதாக டாக்டர் *N* சுகுமாரன் அவர்கள் ஏற்கனவே தெரிவித்ததை முன்னிறுத்தி இரண்டாவது வருடத்தின் விழாவை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இதனால் சங்கத்திற்கும், சங்க உறுப்பினர்களுக்கும் எந்த விதமாக நிதி சுமை இருக்காது என்பதையும் நிர்வாக குழு பதிவு செய்தது. ஒவ்வொரு

வருடமும் ஆண்டு விழா நடத்த அங்கத்தினர்கள் தாமாக முன்வரும் போது அதை நிர்வாக குழு பரிசீலித்து தேவையான முடிவுகள் எடுக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் சிவன் ராத்திரி ஊரில் விமரிசியாக கொண்டாடப்படுவதால் சங்கத்தின் ஆண்டு விழா ஆகஸ்ட் மாதத்தில் கோயம்புத்தூரில் கொண்டாடப்படும் பொழுது ஆறு மாதத்திற்கு ஒரு முறை சங்கத்திற்கு விழா நடத்தும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதால், அனைத்து அங்கத்தினர்களும் ஒன்று கூடும் வாய்ப்பு ஏற்படுகின்றது என்பதையும் நிர்வாக குழு குறிப்பிட்டது.

**இரண்டாவது ஆண்டு விழா மற்றும் பொதுக்குழு கூட்டம்:** இந்த இரண்டாவது ஆண்டு விழா *10-8-2025* அன்று கோயமுத்தூர் வீரபாண்டியில் அமைந்துள்ள மீரா மஹாலில் நடத்தலாம் என்றும், விழாவிற்கு கோவையில் வாழும் நமது ஊர் பெண்கள், நமது அங்கத்தினர்களின் குடும்பங்கள் ஆகியோர் கலந்து கொள்ளும் விழாவாக இதனை ஏற்பாடு செய்யலாம் என்றும், அதன் முழு விவரங்கள் வரும் நாட்களில் திட்டமிடலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மாதந்தோறும் நடத்தும் நிர்வாக குழு கூட்டங்களை தாண்டி வருடத்திற்கு ஒருமுறை சங்கத்தின் பொதுக்குழு கூட வேண்டும். சங்கத்தின் ஆண்டு விழா நடக்கும் அன்றே அதை பொதுக்குழுவாகவும் நடத்தலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**ஊர் விழாக்களில் அங்கத்தினர்கள் தாமாக கலந்து கொள்ள கோரிக்கை:** ஊரில் நடக்கும் விசேஷங்களுக்கு, நமது ஊர் அங்கத்தினர்களை ஊக்குவிப்பதற்காகவும் நமது ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்காகவும் முடிந்த அளவு கோவையில் வாழும் அங்கத்தினர்கள் அந்த விழா தருணங்களில் அவர்களாக முன்வந்து ஊருக்கு செல்வது நன்மை பயக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதுபோன்ற நிகழ்வுகளுக்கு சங்கத்தின் நிதி பயன்படுத்தக் கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஜூலை மாத நிர்வாக குழு கூட்டம் ஊரில் தெவ்வா பண்டிகை நடக்கும் *23-7-2025* அன்று நடத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. நேரில் கலந்து கொள்ள முடியாத நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆன்லைன் மூலம் கலந்து கொள்ளவும் முயற்சிக்கலாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

**நேரடி நிர்வாக குழு கூட்டங்களை குறைக்கும் பரிந்துரை:** சங்கம் ஆரம்பித்த நாள் முதல் அவ்வப்பொழுது நேரடி கூட்டங்கள் நடத்துவது தேவைப்பட்டது. ஏனென்றால் நிர்வாக விதிமுறைகள், திட்டங்கள் ஆகியவை வகுப்பதற்கு இந்த நேரடி கூட்டங்கள் அவசியம் என்று அனைவரும் கருத்தினர். இப்பொழுது நாம் நினைத்த திட்டங்கள் நிறைவேற்றி சுமுகமாக சங்க செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபடியால் இனி நேரடி கூட்டங்கள் அதிகம் தேவைப்படாது என்பதையும் அங்கத்தினர்கள்

நினைவுகூர்ந்தனர். எனவே 3 மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திலோ நேர்முக கூட்டங்களை நடத்தி மற்ற கூட்டங்களை ஆன்லைன் மூலமாகவோ அல்லது தொலைபேசி தொடர்பு மூலமாகவும் நடத்தலாம் என்பதையும் அங்கத்தினர்கள் பரிந்துரைத்தனர். இதன்படி சங்கத்தின் நிர்வாக செலவும் குறையும் என்பதையும் நிர்வாக குழு பதிவு செய்தது.

**கல்வி உதவித்தொகை பற்றிய பரிந்துரை:** நமது முந்தைய கூட்டங்களில் ஒவ்வொரு வருடமும் அங்கத்தினர்களின் குழந்தைகளில் யார் உயரிய வகுப்பில் படித்து முடிக்கின்றார்களோ அவர்களில் ஒருவருக்கு ரூபாய் 5,000 கல்வி உதவித் தொகை அளிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் குழந்தைகள் படிக்காத பட்சத்தில், 8 முதல் 10 வகுப்புகள் வரையில் இருக்கும் குழந்தைகளையும் பரிசீலிக்கலாம் என்பதை அங்கத்தினர்கள் பரிந்துரைத்தனர். ஒவ்வொரு வருடமும் நம் சங்க நிகழ்வுகளில் கல்வி உதவித்தொகை இருக்க வேண்டும் என்பதற்காக கல்வி குழுவின் பரிந்துரையின்படி வருடம் ஒரு குழந்தைக்கு உதவி செய்யலாம் என்பதை மீண்டும் சங்கம் ஊர்ஜிதப்படுத்தியது. ஒரு குழந்தைக்கு ஒரு முறை மட்டுமே உதவி தொகை அளிக்க முடியும் என்பதையும் அங்கத்தினர்கள் பதிவு செய்தனர்.

**சங்கத்தின் நிகழ்வாக கோயில் யாத்திரை:** இந்த வருடம் பெருவாரியான அங்கத்தினர்களின் பரிந்துரையின் பேரில் அவிநாசி கோயிலுக்கு யாத்திரை சென்று வரலாம் என்று நிர்வாக குழு சென்ற கூட்டங்களில் பரிந்துரைத்தது. அதன்படி இந்த கோயில் யாத்திரை சங்கத்தின் நிகழ்வாக முன்னெடுக்கப்பட்டது. எனவே இந்த வருடம் இந்த கோவில் யாத்திரையை (13-7-2025) சங்கம் நடத்த வேண்டும் என்றும், ஆனால் அதற்காக அங்கத்தினர்கள் அனைவரும் கட்டாயம் தங்களது அன்பளிப்பை அளிக்க வேண்டும் என்று நிர்பந்தப்படுத்தக் கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

கோவில் யாத்திரைக்கு ஏற்படும் செலவுகளுக்காக சங்க நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யக்கூடாது என்பதையும் நிர்வாக குழு தீர்மானித்தது.

கோவில் விழாவிற்காக ஆகும் மொத்த செலவுகளை சங்கத்தின் அங்கத்தினர்கள் அளிக்கும் நன்கொடை மூலமாகவே எதிர்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி நமது நிர்வாக குழு உறுப்பினர் திரு ராமச்சந்திரன் அவர்கள் யாத்திரைக்கு வரும் அனைவருக்கும் மதிய உணவு செலவினத்தை அவர் ஏற்பதாக தெரிவித்ததை அனைவரும் பாராட்டினார். அதேபோன்று மற்ற செலவினங்களையும் ஏற்க அங்கத்தினர்கள் ஒப்புக் கொள்ளலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

**எதிர்காலத்தில் கோவில் மற்றும் சுற்றுலாக்கள் பற்றிய பரிந்துரை:** வரும் வருடங்களில் கோவில் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளும், சுற்றுலா நிகழ்வுகளும் சங்கத்தின் நேரடி நிகழ்ச்சிகளாக கருதப்படக் கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது. கோவில் யாத்திரை

செல்லும் விருப்பமுள்ள சங்க உறுப்பினர்களும், சுற்றுலா செல்வதற்கு விருப்பம் உள்ள உறுப்பினர்களும் இதை தனியாக திட்டமிட்டு அந்த செலவினங்களை அந்தந்த நிகழ்வுகளில் பங்கேற்பவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

எனவே வரும் ஆண்டுகளில் சங்கத்தின் மூலம் நேரடியாக நடைமுறைப்படுத்தும் செயல்கள் இறுதியாத்திரை, மருத்துவம், கல்வி, மகா சிவராத்திரி மற்றும் ஆண்டு விழா (தேவை கருதி) இவை இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த வருடம் அவனாசி கோவில் யாத்திரையில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. திரு சுப்பிரமணி, திரு சகாதேவன் மற்றும் திரு கணேஷ் அவர்கள் எல்லா அங்கத்தினர்களையும் தொடர்பு கொண்டு ஒவ்வொரு வீட்டில் இருந்து எவ்வளவு நபர்கள் இந்த கோவில் யாத்திரையில் கலந்து கொள்வார்கள் என்ற தகவலை இந்த வார கடைசிக்குள் முடிவு செய்யும் பொழுது வாகன ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்ய முடியும் என்பதையும் அங்கத்தினர்கள் வலியுறுத்தினர். கோயில் நிகழ்வுக்காக அவர்களாக முன்வந்து நன்கொடை அளிக்க விரும்புபவர்கள், கூடிய விரைவில் அவர்களது பங்களிப்பை அளித்தால் வரவு செலவுகளை திட்டமிட உதவியாக இருக்கும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.



**மருத்துவ உதவி:** சமீபத்தில் அறுவை சிகிச்சை செய்த திருமதி ராஜியம்மாள் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் ரூபாய் 5,000 மருத்துவ உதவித் தொகை அளிப்பதற்கு நிர்வாகக்குழு முறையாக ஒப்புதல் அளித்தது. கூட்டத்தை தொடர்ந்து நமது அங்கத்தினர்கள் அவரை நேரடியாக சந்தித்து இந்த உதவியை காசோலை மூலம் அளித்தனர். இந்த காசோலை அவரது மூத்த மகனும் சங்க அங்கத்தினருமான திரு J B சுரேஷ் அவர்கள் பெயரில் அளிக்கப்பட்டது.

இறுதியாக சங்கத்தின் உப தலைவர் திரு K அரசு அவர்கள் நன்றியுரை நவில நிர்வாக குழு கூட்டம் இனிதாக நிறைவுற்றது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## அருள்மிகு அவினாசிலிங்கேஸ்வரர் சிவஸ்தலம் வளாகம்
## அவிநாசி

### *13-7-2025*

*சங்கத்தின் ஜூலை மாத சிறப்பு நிர்வாக குழு கூட்டம் 13-7-2025 அன்று ஆன்மீக யாத்திரையுடன் சேர்ந்து அருள்மிகு அவிநாசிலிங்கேஸ்வரர் சிவஸ்தலத்தில் சிறப்பாக நடந்தது.*






முன்னதாக நமது சங்கத்தின் சார்பில் முக்கிமலை ஊரின் நலம் வேண்டி நேர்த்திக்கடன் செலுத்தப்பட்டது. இந்த சிறப்பு பயணத்தில் கலந்து கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட நமது ஊர் சொந்தங்கள், கோவை வாழ் சொந்தங்கள் மற்றும் அவர்கள் குடும்ப அங்கத்தினர்கள், உறவுகள் அனைவரும் சங்கத்தின் தலைவர் திரு *J* சந்திரன், ஊர் பெரியவர் திரு *K K* ராமா கவுடர் ஆகியோர் தலைமையில் தாம்பூலம் ஏந்தி நமது பாரம்பரிய "ஹொவ் ஹொவ்" கோஷமிட்டு கோவிலின் வெளிப்புற பிரகாரத்தை சுற்றி வந்தனர்.



கோவிலில் இருந்த பிற பக்தர்கள் வெள்ளை உடை அணிந்த நமது பெரும் கூட்டத்தையும், தாய்மார்களையும், குழந்தைகளையும் நெகிழ்ச்சியுடன் பார்த்த நிகழ்வு, மற்றும் ஆன்மீக அதிர்வலைகள் நிறைந்த கோவில் பிரகார நேர்த்திக்கடன் மனதிற்கு அமைதி கொடுக்கும் தன்மையில் இருந்தது.



பின்பு அவனாசியப்பரை நோக்கி அமர்ந்துள்ள நந்திகேஸ்வரருக்கு அபிஷேகம் செய்து நமது சங்கம் சார்பில் அவருக்கு வஸ்திரம் போர்த்தி சிறப்பு பூஜை நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து அருள்மிகு அவனாசியப்பருக்கு, சங்கத்தின் சார்பில் வஸ்திரம் அணிவித்து, மாலை மரியாதை செய்து நமது நன்றி அறிதலை காணிக்கையாக்கினோம்.

அதை தொடர்ந்து கருணை வடிவமான கருணாம்பிகை அம்பாளுக்கு பட்டுப் புடவையுடன் மாலை அணிவித்து நமது மரியாதையை செலுத்தி நமது முக்கிமலை ஊரில் பிறந்த சொந்தங்கள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் அத்துணை பேரும் சகல சௌபாக்கியங்களுடன், பூரண ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்று மனதார பிரார்த்தனை செய்யப்பட்டது.



நமது விசேஷ பூஜையை முன் நின்று நடத்திய அர்ச்சகர் கோகுல் சுவாமி அவர்கள் பூஜை சிறப்பாக நடைபெற்றதை தன்னால் உணர முடிந்தது என்றும், பூஜையில் கலந்து கொண்ட நமது சங்க அங்கத்தினர்கள் அனைவருக்கும் அவிநாசிலிங்கேஸ்வரரின் பூரண ஆசீர்வாதம் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

நமது ஊரில் விசேஷங்கள் நடக்கும் சமயத்தில், தேவைப்பட்டால் தாமே நேரில் வந்து கலந்து கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நமது கோவில் பூஜாரிகள் திரு ராமா கவுடர், திரு சுந்தரம் ஆகியோரை பூஜை செய்த கோகுல் சுவாமிகளுக்கு அறிமுகம் செய்து வைத்து, நமது ஊரில் பூஜைகள் சிறப்பாக நடைபெற அவர்களுக்கு கோகுல்சாமி அருளாசி வழங்கினார்.

தொடர்ந்து கோவில் வளாகத்தில் நமது பாரம்பரிய நடனமாடி, எங்களின் நடன அசைவுகளும் சிவபெருமானின் வெவ்வேறு நடன அசைவுகளில் அடங்கும் என்பதை நினைவு கூறும் விதமாக, பக்தி பரவசத்துடன் நாட்டிய அஞ்சலி நடைபெற்றதை கோவில் வளாகத்தில் இருந்த பிற பக்தர்களும் பொது ஜனங்களும் கண்டு களித்தனர்.











பூஜைகள் சிறப்பாக முடிந்ததை தொடர்ந்து, ஆன்மீக யாத்திரையில் கலந்து கொண்ட அத்தனை சொந்தங்களுக்கும் கொடையுள்ளம் படைத்த திரு ராமச்சந்திரன் குடும்பத்தினர் அவிநாசியில் உள்ள அன்னபூர்ணா உணவகத்தில் பிரம்மாண்டமான சிறப்பு மதிய உணவு ஏற்பாடு செய்தனர். பூஜையில் கலந்து கொண்ட அத்தனை சொந்தங்களும் திரு ராமச்சந்திரன் குடும்ப அங்கத்தினருக்கு மனமார நன்றியை தெரிவித்து, அவர்கள் குடும்பத்தினருக்கு அவனாசிலிங்கேஸ்வரரின் முழு ஆசீர்வாதமும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனர். நேர்த்தியான ஏற்பாடுகள் செய்த திரு பிரவீன் ராமச்சந்திரன் அவர்களுக்கும் அனைத்து பக்தர்கள் மற்றும் நமது ஊர் சொந்தங்கள் சார்பாகநன்றியை தெரிவித்தனர்.











மதிய உணவு உண்ட பின்பு அனைவரும் ஹோட்டல் வளாகத்திலேயே கலந்துரையாடி, சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்பு, மறுபடியும் அவினாசிலிங்கேஸ்வரர் கோயிலுக்கு சென்று மதிய நிகழ்வுகளை தொடங்கினர்.






மதியம் *2.30* மணிக்கு முறையான நிர்வாக குழு கூட்டம் தொடங்கியது. சங்கத்தின் இணை செயலாளர் திரு *R* சிவக்குமார் தவிர அனைத்து நிர்வாகக் குழு உறுப்பினர்களும், புரவலர்களும், ஊர் சொந்தங்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



சங்கத்தின் தலைவர் திரு *J* சந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து சங்க நிகழ்வுகள் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. சங்கத்தின் ஒற்றுமை பெருகி வருவதை அனைவரும் நன்றியுடன் பாராட்டினர். இது போன்ற ஆன்மீக யாத்திரை எப்பொழுதெல்லாம் முடியுமோ அந்த தருணத்தில் மேற்கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.

யாத்திரையில் கலந்து கொள்ளும் சிறு குழந்தைகளை ஆன்மீக பாதையில் ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக நமது அங்கத்தினர் திரு *K* மணி அவர்களின் புதல்வி செல்வி ராதிகா அவர்கள் பத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கியது இந்த யாத்திரைக்கு மேலும் மகுடம் சேர்க்கும் படியாக இருந்தது. செல்வி ராதிகா அவர்களுக்கும் அவர்கள் குடும்ப அங்கத்தினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.



இந்த புனித யாத்திரை சிறப்பாக நடைபெற வேண்டும் என்று அங்கத்தினர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் உத்வேகம் பிறந்திருக்கின்றது என்பதனை அவர்கள் பயணம் மேற்கொண்ட விதம், பயண ஏற்பாடுகள் செய்த முறை, பயபக்தியுடன் செய்த வழிபாடு, சங்கம் எதிர்காலத்தில் இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற உறுதிப்பாடு ஆகியவை வெளிப்படுத்தியது. இந்தப் பயணம் சிறப்பாக அமைய ஆத்மார்த்தமாக அங்கத்தினர்கள் மேற்கொண்ட செயல்களுக்கு நிர்வாக குழு அத்துணை சொந்தங்களுக்கும் நன்றி தெரிவித்தது. சங்கத்தின் உப தலைவர் திரு *K* அரசு அவர்களது நன்றியுடன் நிர்வாக குழு கூட்டம் இனிதாக முடிந்தது.





நிர்வாகக்குழு கூட்டம் முடிந்ததும் யாத்திரையில் கலந்து கொண்ட அத்துணை சொந்தங்களுக்கும் நமது ஊரின் அமரர் திரு பில்லா கவுடர் குடும்பத்தின் சார்பாக சிறப்பான மாலை சிற்றுண்டி அளிக்கப்பட்டது. திருமதி மிச்சியம்மாள், அங்கத்தினர்கள் தருமன், சத்தியசீலன் மற்றும் அவர்கள் குடும்ப அங்கத்தினர்கள் அனைவருக்கும் யாத்திரை சென்ற அன்பர்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்து, அவர்கள் சீரும் சிறப்புடன் வாழ, எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்தனர்.

இந்த யாத்திரைக்காக பணம் உதவி செய்த அனேக அங்கத்தினர்களுக்கு சங்கம் மனதார நன்றி தெரிவித்து, அவர்களது ஒத்துழைப்பு என்றைக்கும் இருக்க வேண்டும் என்று அத்துணை கொடையாளர்களுக்கும் நன்றியை பதிவு செய்தது. கொடை அளித்த அன்பர்களின் பட்டியல் அடுத்த மாத சங்க அறிக்கையில் குறிப்பிடப்படும்.

தொடர்ந்து சங்கம் சார்பில் ஏற்பாடு செய்த வாகனத்தில் பிரயாணித்தவர்கள் அவர்கள் இல்லங்களுக்கு செல்வதற்கு முன்பாக தென்திருப்பதியில் அமைந்திருக்கின்ற மகாவிஷ்ணுவின் ஸ்தலத்திற்கு சென்று பூஜை நடத்தி பின்பு அவர்கள் இருப்பிடத்திற்கு பத்திரமாக சென்றடைந்தனர்.

அங்கத்தினர்கள் பல இடங்களில் இருந்து புறப்பட்டு அவிநாசி வந்தடைந்து, எந்தவித தடையும் இல்லாமல் பூஜை நிறைவேறி, மனதார வழிபாடு செய்து, பின்பு அவரவர்கள் இல்லத்திற்கு பத்திரமாக சென்றடைந்தது, அந்த அவிநாசிலிங்கேஸ்வரரின் அருளால் என்பதை மீண்டும் நினைவில் கொண்டு, அவரது அழைப்பில்லாமல் நாம் அவினாசி சென்றிருக்க வாய்ப்பில்லை என்பதை மனதில் ஆழமாக பதித்து, எல்லாம் வல்ல சிவபெருமான் வரும் காலங்களிலும் இதுபோன்ற ஆன்மீகப் பயணங்கள் மேற்கொள்ள நமக்கெல்லாம் வழி வகுக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் சங்க நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

***ஓம் நமசிவாய!!!***

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## தெவ்வா பண்டிகை - முக்கிமலை

## *23-7-2025*

*13-7-2025* அன்று நமது சொந்தங்கள் மேற்கொண்ட அவிநாசி ஆன்மீக யாத்திரையை தொடர்ந்து, *23-7-2025* அன்று நமது ஊர் சொந்தங்களும் கோவை வாழ் சொந்தங்களும் சேர்ந்து நமது ஊரில் தெவ்வா பண்டிகை மிக சிறப்பாக கொண்டாடினர். ஜூலை மாதம் ஆன்மீக எழுச்சிக்காகவே சங்கத்திற்கு பரம்பொருள் அளித்த ஆசீர்வாதம் என்று எண்ணும் வகையில் ஊரில் நடந்த திருவிழாவும் ஆன்மீக எழுச்சியுடன் அமைந்தது.

நமது ஊரில் எழுந்தருளி இருக்கும் மகாலிங்கய்யாவும் பார்வதி தேவியும் நமக்கு அருள் நிறைந்த ஆசீர்வாதம் என்றைக்கும் நல்குவார்கள் என்று பிரார்த்திப்போம்.



*23-7-2025* அன்று கோவையிலிருந்து மூன்று வாகனங்களில் *21* சொந்தங்கள் ஊர் திருவிழாவிற்காக அதிகாலை கோவையில் இருந்து புறப்பட்டு சரியாக *10* மணிக்கு நமது

ஊர் சென்றடைந்தனர். நமது ஊரின் சொந்தங்கள் அனைவரையும் அன்பாக வரவேற்று சிறப்பான தேநீர் ஏற்பாடு செய்திருந்தனர்.







தேநீர் அருந்திய பின் அனைவரும் நமது கோயிலுக்கு சென்று, சிறப்பான பூஜை ஏற்பாடு செய்திருந்த பூஜாரி சுந்தரம் முன்னின்று பூஜை நடத்த, அனைவரும் சிவபெருமானை மனதார வணங்கினர்.



ஊர் தலைவர் திரு *K* சந்திர கவுடர் மற்றும் சங்கத்தின் தலைவர் *J* சந்திரன் ஆகியோர் ஊர் காணிக்கை செலுத்த, தொடர்ந்து மற்ற அன்பர்களும் தங்களது காணிக்கையைச் செலுத்தி சிவபெருமானை மனதார வழிபட்டனர்.





இந்த நன்னாளானது *2025* வருடத்தில் வரும் *12* மாதாந்த சிவராத்திரிகளில், ஜூலை மாதத்தில் வரும் சிவராத்திரியாக அமைந்தது மேலும் ஆன்மீக எழுச்சியை விழாவிற்கு அளித்தது என்பது நிதர்சனம்.



கோவில் காணிக்கை செலுத்தியதை தொடர்ந்து நமது சிவன் கோயிலை மூன்று முறை  வெளி பிரகாரத்தில் வலம் வந்து நமஸ்காரம் செய்தனர்



தொடர்ந்து நமது ஊரின் எத்தையம்மன்  தலத்திற்கு சென்று காணிக்கை செலுத்தி வணங்கினர்.









எத்தையம்மன் ஸ்தலத்தில் ஆரத்தி எடுத்த பொழுது மேகமூட்டத்துடன் மழை தூறல் இருந்த சீதோஷ்ண நிலை திடீரென சுமார் *15* வினாடிகள் மாறி சூரிய ஒளி தென்பட்டு, பின்பு மீண்டும் மேகம் சூழ்ந்தது அனைவரது உள்ளத்திலும் ஒரு ஆன்மீக நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.





எத்தையம்மன் தல வழிபாட்டை தொடர்ந்து மீண்டும் சிவன் கோயில் வளாகத்திற்கு வந்து இறைவனுக்கு படைக்கப்பட்ட நைவேத்திய பிரசாதத்தை உண்டனர்.



இந்து மத பாரம்பரியத்தின்படி இறைவனுக்கு படைக்கப்பட்ட "நைவேத்யம்" புனிதமாக கருதப்படுகிறது. இதன் மூலம் பரம்பொருள் அவரது தெய்வீக கிருபையும் ஆசீர்வாதங்களையும் பக்தர்களுக்கு அளிப்பார் என்றும் நம்பப்படுகிறது.



தொடர்ந்து நமது சமுதாய கூடத்திற்கு சென்ற நமது சொந்தங்கள் சங்கத்தின் வளர்ச்சிகள், சங்க அங்கத்தினர்களின் ஒருமித்த கருத்து மற்றும் ஊர் சார்பாக நாம் முன் நிறுத்தும் அணுகுமுறை ஆகியவற்றை விவாதித்தனர்.

தொடர்ந்து நமது ஊர் சொந்தங்கள் ஏற்பாடு செய்த சிறப்பான அறுசுவை விருந்தினை ஏற்று அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்தனர்.









நமது ஊரில், வரும் காலத்தில் நடக்கும் எந்த விழா ஆனாலும் நமது சொந்தங்கள் பெரும்பாரியாக கலந்து கொள்கின்றோம் என்று அனைவரும் தெரிவித்தது பாராட்டுக்குரியது. இது சங்கத்தின் பரிணாம வளர்ச்சியை உணர்த்துகின்றது என்று அனைவரும் தெரிவித்தனர்.



இது நிர்வாக குழு கூட்டம் இல்லை என்றாலும், பெருவாரியான நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டதின் பேரில் இரண்டு நிர்வாக சம்பந்தப்பட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நமது அங்கத்தினர்கள் திருவாளர்கள் *R* சுனில் குமார் மற்றும் *R* சிவனேசன் ஆகியோரின் தாயார் திருமதி மேரியம்மாள் ராஜு கவுடர் அவர்கள் மேற்கொண்ட கண் அறுவை சிகிச்சைக்காக சங்கத்தின் சார்பில் ரூபாய் *5,000* மருத்துவ உதவி தொகை கொடுப்பதற்கான தீர்மானம் பரிந்துரைக்கப்பட்டது.

நமது ஊரில் மேற்கொண்ட கோவில் பணிக்காக (முன் கதவு), சங்கத்தின் சார்பில் ரூபாய் *25,000* நமது பங்களிப்பாக அளிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது *50* அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தலா ரூபாய் *500* அளிப்பதாக கருதப்பட வேண்டும் என்றும், இந்த தொகை சங்கத்தின் தற்போதைய இருப்பு நிதியிலிருந்து கொடுக்கப்படும் என்றும், இதற்காக சங்க உறுப்பினர்களிடம் எந்த கட்டணமும் வசூலிக்க வேண்டியது இல்லை என்றும் குறிப்பிடப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்களுக்கு ஆகஸ்ட் மாதம் நடக்கும் நிர்வாக குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படும்.

இந்த அறிக்கையில் பிரசுரிக்கப்பட்ட புகைப்படங்களில் இருக்கும் சொந்தங்களையும் தாண்டி அனேக பேர் ஆங்காங்கு பணியில் ஈடுபட்டதை அனைவரும் குறிப்பிட்டு அவர்களுக்கு நமது பாராட்டுதல்களையும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளனர். நமது ஊர் சொந்தங்கள் இப்படிப்பட்ட விழாவை எந்த அளவிற்கு அவர்களாக முன்வந்து சிக்கனத்துடன் நடத்தலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்ததை அனைவரும் பாராட்டினர். குறிப்பாக நமது ஊரில் நமது தாய்மார்களும் சகோதரிகளும் மிகச் சிறப்பாக

இந்த திருவிழா சிறப்பாக நடைபெற ஆற்றிய பணிக்கு சங்கம் மனமார்ந்த நன்றியை பதிவு செய்கிறது.



***ஓம் நமசிவாய!!!***

## முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## பொதுக்குழு கூட்டம் மற்றும் திருவிழா

**கோயமுத்தூர் வீரபாண்டி, மீரா மஹால்**
***10-8-2025***

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் பொதுக்குழு கூட்டம் மற்றும் திருவிழா *10-8-2025* அன்று கோயமுத்தூர் வீரபாண்டியில் அமைந்துள்ள மீரா




மஹாலில் காலை *9* மணி முதல் மாலை *5.30* மணி வரை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பொது குழு கூட்ட செயல்பாடுகள் காலை *10* மணி முதல் மதியம் ஒரு *1* வரை விவாதிக்கப்பட்டது. மதியம் *2* மணி முதல் மாலை *5.30* மணி வரை ஊர் மக்கள் ஒன்று கூடிய திருவிழாவாகவும் கொண்டாடப்பட்டது.

பொதுக்குழு காலை *10* மணிக்கு விநாயகர் பூஜையுடன் தொடங்கப்பட்டது.








   

   

ஊர் பெரியவர் திரு K K ராமன் அவர்கள் முன்னிலையில், ஊர் தலைவர் திரு K சந்திர கவுடர் அவர்கள் தலைமை தாங்கினார். பொதுக்குழு நிகழ்வுகளை சங்க புரவலர் MNG மணி ஒருங்கிணைத்து நடத்தினார். தலைமை மற்றும் வரவேற்புரையில், திரு சந்திர கவுடர் அவர்கள் சங்கத்தின் நிர்வாக குழு மற்றும் அங்கத்தினர்கள் ஒரு வருட காலமாக அயராது உழைத்ததின் பலனாக சங்கம் ஒரு உன்னத நிலையை அடைந்திருக்கின்றது என்று குறிப்பிட்டார். "ஒன்றுபட்டால் உண்டு உண்டு வாழ்வு" என்னும் பழமொழிக்கேற்ப சங்க அங்கத்தினர்களின் ஒற்றுமை சங்கத்தை மேன்மேலும் வளர்ச்சி அடைய செய்யும் என்று குறிப்பிட்டு, எல்லாம் வல்ல இறைவன் சங்கத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து ஆசிர்வாதம் அளிப்பார் என்று குறிப்பிட்டார்.





தொடர்ந்து பேசிய சங்கத்தின் தலைவர் திரு J சந்திரன் அவர்கள், 2024 ஜூன் 2 அன்று "முக்கிமலைகாகி முக்கிமலையவக்க" என்ற கொள்கை படி 14 உறுப்பினர்களுடன் நிறுவப்பட்ட சங்கமானது, ஆகஸ்ட் 11, 2024 அன்று அலுவலக பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றபோது உறுப்பினர்கள் எண்ணிக்கை 36 ஆக வளர்ந்தது; 2024 செப்டம்பர் மாத இறுதிக்குள் 50 உறுப்பினர்கள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர் என்று குறிப்பிட்டார். சங்கத்தின் தொடக்க விழாவுக்கு முன்பு 7 பூர்வாங்க கூட்டங்களை நடத்தி, தொடக்க விழாவிற்கு பிறகு 11 மாதாந்திர கூட்டங்களை நடத்தி, முதல் ஆண்டில் மொத்தம் 20க்கும் மேற்பட்ட கூட்டங்களை சங்கம் நடத்தியுள்ளது; அதில் இரண்டு



பொதுக்குழு கூட்டங்கள் மற்றும் ஊர்மக்கள் ஒருங்கிணைப்பு கூட்டமும் அடங்கும் என்று குறிப்பிட்டார்.

உறுப்பினர்கள் தினசரி செயல்பாட்டில் சுறுசுறுப்பாக செயல்பட்டு, திருவிழாக்கள் மற்றும் குடும்ப நிகழ்வுகளில் செய்திகளை சொந்தங்களிடம் பகிர்ந்து வருகின்றனர்; 2025 ஜூலை 23 அன்று நடைபெற்ற தெய்வ திருவிழா உட்பட அனைத்து கூட்ட தீர்மானங்களும் www.mmcbesociety.com என்ற இணையதளத்தில் கிடைக்கின்றன; இது சங்கத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் முன்னேற்ற முயற்சிகளை பிரதிபலிக்கிறது என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய சங்கத்தின் செயலாளர் திரு. R சுப்பிரமணி அவர்கள் சங்கத்தின் முக்கிய திட்டங்களில் வரி இல்லா இறுதி பயணம், மருத்துவ உதவி மற்றும் கல்வி உதவி ஆகியவை அடங்கும் என்று குறிப்பிட்டார்.

"வரி இல்லா இறுதி பயணம்" திட்டத்திற்காக பெரியநாயக்கன்பாளையம் ICICI வங்கியில் அங்கத்தினர்கள் நன்கொடை மூலம் ரூ. 15 லட்சம் நிதி திரட்டி நிரந்தர வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். இதன் மூலம் கிடைக்கும் வட்டி தற்போதைய மற்றும் எதிர்கால உறுப்பினர்களின் இறுதி பயணச் செலவுகளை எதிர்கொள்ள பயன்படும் என்றும் தெரிவித்தார். இந்த வருடத்தில் உறுப்பினர் திரு. N மாதன் அவர்களின் இறுதி பயணச் செலவு ரூ. 37,959 முழுமையாக சங்கத்தால் அளிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடப்பட்டது. கூடுதலாக, உறுப்பினர் நன்கொடைகள் மூலம், ரூ. 1 லட்சம் கேஸ் மயானத்திற்கு கொடுக்கப்பட்டது நினைவுறுத்தப்பட்டது. கூட்டத்திற்கு வந்த அனைவரும் மறைந்த உறுப்பினர் திரு N மாதன் அவர்களுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.



பொதுக்குழு கூட்டத்திற்கு வர முடியாத காரணத்தினால் இணைச்செயலாளர் R சிவக்குமார் அவர்களது அறிக்கையை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் புரவலர் M N G மணி அவர்கள் வழங்கினார். அந்த அறிக்கையின்படி சங்கம் இந்த வருடத்தில் மருத்துவ உதவியாக மொத்தம் ரூ. 50,000 வழங்கியுள்ளது, இது 10 நபர்கள் அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட பொழுது வழங்கப்பட்டது. பொதுக்குழு கூட்டம் நடந்த 10-8-2025 அன்று மருத்துவ உதவி தொகையாக ரூபாய் 5,000 திருமதி மேரியம்மாள் ராஜு கவுடர் அவர்களுக்காக, சங்க அங்கத்தினரும் அவரது புதல்வர் திரு R சுனில்குமார் பெற்றுக்கொண்டார்.



கூடுதலாக, குழந்தைகளின் கல்வியை ஆதரிக்க கல்வி ஊக்குவிப்பு திட்டத்தின் படி முதல் ஆண்டில் செல்வி S. ரினிதாவுக்கு ரூ. 5,000 வழங்கப்பட்டது. எனவே சங்கம் மரணம்,

மருத்துவம், மற்றும் கல்வி ஆகியவற்றிற்காக தொடர்ந்து அங்கத்தினர்களுக்கு உதவி செய்து வருகின்றது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சங்கத்தின் இணைப்பொருளாளர் திரு J கணேஷ் அவர்கள் முக்கிமலை ஊர் பெண்கள் மற்றும் மருமகள்கள் குடும்பங்களில் நடந்த 9 மரண நிகழ்வுகளில் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் என்று குறிப்பிட்டார். அதில் திரு அரசையா - கோத்திபென் ( திரு N



சுகுமாரனின் மாமனார்), திருமதி மல்லக்கா - மந்தணை (திரு K K ராமா கவுடரின் சகோதரி), திரு ராமா கவுடர் - நஞ்சநாடு (திருமதி பார்வதி கணேசனின் தந்தை), திரு சுந்தர்ராஜ் - நஞ்சநாடு (திருமதி வனஜாவின் கணவர்), திரு ராதாகிருஷ்ணன் - கிண்ணகொறை (திருமதி ஷீலாவின் கணவர்), திருமதி குண்டியம்மாள் - இத்தலார் (திரு தாத்தா கவுடரின் சகோதரி), திருமதி ஜானகி அம்மாள் - கிண்ணகொறை (திரு J சந்திரன் மற்றும் திரு J கணேஷின் அத்தை), மற்றும் திருமதி சரோஜியம்மாள் - ஒசஹட்டி (திரு லிங்கா கவுடரின் மகள்) அடங்கும். பொதுக்குழு மேற்கண்டோரின் மறைவிற்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியது.



நிர்வாகக் குழு உறுப்பினர் திரு M R சிவகுமார் கடந்த ஒரு வருடத்தில் சங்க அங்கத்தினர்கள் தவிர முக்கிமலை ஊரில் ஏற்பட்ட பல மரணங்களை பட்டியலிட்டார். அதில் திரு L. சந்திரன் (28 ஜூன் 2024), திருமதி மணி அம்மாள் (2 ஆகஸ்ட் 2024), திருமதி சென்னை அம்மாள் (3 அக்டோபர் 2024), திரு B போஸ் கவுடர் (14 நவம்பர் 2024), திருமதி ஜானி ஆரி (28 நவம்பர் 2024), மற்றும் திரு J ராமா கவுடர் (2 ஜூலை 2025) ஆகியோர் அடங்குவர். இந்த மரண அறிவிப்புகள், சம்பவம் நடந்த நாளே வாட்ஸ்அப்பில் சங்க உறுப்பினர்களுக்கு உடனடியாக பகிரப்பட்டன. பொதுக்குழு இந்த சொந்தங்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தியது.

திரு B. மோகன்ராஜ், செயற்குழு உறுப்பினர் சார்பில் புரவலர் MNG மணி அவர்கள் கோயம்புத்தூரில் முக்கிமலை ஊர் சொந்தங்கள் உடல்நிலை குறைபாடு காரணமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட செய்தி அறியும் பொழுது சங்க உறுப்பினர்கள் நேரடியாக சென்று நலம் விசாரிக்கும் வழிமுறை நடந்து வருகிறது என்று குறிப்பிட்டார். மேலும் உறுப்பினர்கள் இல்ல விழாக்களில் கலந்து கொள்வதும் நடைமுறைக்கு வந்துள்ளது. அதன்படி திரு B. ராஜேஷின் மகள், திரு J. கணேஷின் மகள் நன்னீராட்டு (புனித நீர்) விழாக்களில் சங்க அங்கத்தினர்கள் பங்கேற்றுள்ளனர். கூடுதலாக, சங்கம் முக்கிமலை கோவிலில் வாராந்திர வழிபாட்டு விழாக்களை நடத்துகிறது, இதற்கான வார செலவு சுமார் ரூ. 500 ஆகும். இந்த நிகழ்வுகளுக்கான நிதி மற்றும் ஏற்பாடுகளை பொறுப்பேற்கும் குடும்பங்கள் சுழற்சி முறையில் நடத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டில், சங்கம் மேற்கொண்ட ஆன்மீக விழாக்கள் பற்றி நிர்வாக குழு உறுப்பினர் திரு K ராமச்சந்திரன் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார். 2025 பிப்ரவரி 26

அன்று, நமது ஊர் சிவன் கோவிலில் மஹா சிவராத்திரி பூஜைகள் இரவு முழுவதும் நடைபெற்றது, இதில் 60க்கும் மேற்பட்ட உறவினர்கள் கலந்து கொண்டு, இந்த திருவிழாவை ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடும் தீர்மானம் எடுக்கப்பட்டது.



2025 ஜூலை 13 அன்று, சுமார் 100 உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் அவினாசிலிங்கேஸ்வரர் சிவன் கோவிலுக்கு, கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, ஆன்மீக கடமைகளை நிறைவேற்றுவதற்காக யாத்திரை சென்றனர். மூன்றாவதாக 2025 ஜூலை 23 அன்று, கோயம்புத்தூரிலிருந்து 21 உறவினர்கள் ஊர் சொந்தங்களுடன் சேர்ந்து தெவ்வ திருவிழாவில் கலந்து கொண்டு அன்னதானத்தில் பங்கேற்றனர். இந்த திருவிழாக்களை ஆண்டுதோறும் தொடர பரிந்துரை செய்யப்பட்டது.



தொடர்ந்து பேசிய சங்கத்தின் பொருளாளர் திரு B சகாதேவன் அவர்கள் 2024-2025 நிதியாண்டில், சந்தாக்கள் மற்றும் நன்கொடைகளின் மூலம் ரூ. 18,45,459 பெறப்பட்டது என்றும், மொத்த செலவுகள் ரூ. 3,24,960 ஆக இருந்தன என்றும் தெரிவித்தார். 2025-2026 ஆண்டில், ஜூலை 27, 2025 வரை, ரூ. 1,60,393 பெறப்பட்டது, இதில் அவிநாசி கோயில் யாத்திரையின் போது மதிய உணவுக்காக திரு. ராமச்சந்திரனின் குடும்பத்திடமிருந்து ரூ. 16,100 மற்றும் திரு. பில்லா கவுடரின் குடும்பத்திடமிருந்து டீக்காக செலவு செய்த ரூ. 3,500 அடங்கும். இதுவரை மருத்துவ உதவி, கல்வி ஆதரவு, தெவ்வ திருவிழா பூஜை மற்றும் அன்னதானம், வாகனச் செலவுகள் மற்றும் கிராம கோயிலின் முன் கதவு மேம்பாடுகள் ஆகியவற்றுக்கு ரூ. 1,31,693 செலவிடப்பட்டுள்ளது. (முக்கிமலை கிராம கோயில்களை விலங்குகளிலிருந்து பாதுகாக்க சுமார் ரூ. 90,000 மதிப்புள்ள கதவுகள் நிறுவப்படுகின்றன. நமது சங்கத்தின் சார்பாக ரூ. 25,000 காசோலை வழங்கப்பட்டுள்ளது என்று தனது அறிக்கையை சமர்ப்பித்தார்.)



நிதிநிலைக் குழுவின் தலைவர் புரவலர் டாக்டர் N சுகுமரன் 2025 ஜூலை 27 ஆம் தேதி நிலவரப்படி, சந்தா மற்றும் நன்கொடைகளின் மூலம் மொத்தம் ரூ. 20,05,852 பெறப்பட்டுள்ளது, செலவுகள் ரூ. 4,56,653 ஆகும். மீதமுள்ள நிதிகளில் ரூ. 15,00,000 நிலையான வைப்பு கணக்குகளில் உள்ளது, இது 2025-2026 ஆண்டில் ரூ. 1,31,820 வட்டி உண்டாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, இது 2025 நவம்பர் முதல் 2026 மார்ச் வரை வங்கி கணக்கில் செலுத்தப்படும் செய்யப்படும் என்று தெரிவித்தார். நிலுவையில் உள்ள சந்தாக்களுடன் கூடிய தற்போதைய கணக்கு இருப்பு ரூ. 59,199 ஆகும். சங்கத்தின் நிதி நிலை

சிறந்ததாகவும் எதிர்பார்ப்புகளை கடந்தும் உள்ளது என்று தெரிவித்து உறுப்பினர்களுக்கும் நன்கொடையாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்தார்.

வரும் காலங்களில் குழந்தைகளின் பிறந்த நாள் மற்றும் குடும்பங்களில் முக்கியமான நாள் ஆகியவற்றை முன்னிறுத்தி சங்கத்திற்கு நன்கொடை அளிக்க முன் வந்தால் சங்கத்தின் நிதிநிலை மேன்மேலும் வளரும் என்ற பரிந்துரையையும் முன் வைத்தார்.



வருமான மற்றும் செலவு கணக்குகள் பால் தங்கம் அரவிந்த் தங்கம் கணக்காய்வு நிறுவனம் இலவசமாக ஆய்வு செய்தமைக்காக சங்கம் தனது மனமார்ந்த நன்றியை பதிவு செய்தது. மேலும் பொருளாளருக்கு துல்லியமான கணக்குகளை பராமரிக்க உதவிய திரு. *N.* வேல்முருகன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு நன்றி தெரிவிக்கப்பட்டது.



நமது சங்கத்தில் சந்தா, நன்கொடை மற்றும் எந்த பரிவர்த்தனை ஆனாலும் வங்கி மூலமாகத்தான் செய்ய வேண்டும் என்ற விதி உள்ளதால், அநேக அங்கத்தினர்களுக்கு பரிவர்த்தனை குறித்த விளக்கங்களும் உதவியும் செய்து முதல் வருடத்தில் மிகவும் சிரத்தையுடனும் பக்தியுடனும் உதவிய திரு *R* பிரவீன் அவர்களுக்கு பொதுக்குழுவும் அனைத்து சொந்தங்களும் மனமார்ந்த நன்றியை தெரிவித்து, அவரது சேவை இன்னும் சங்கத்திற்கு தொடர வேண்டும் என்று பாராட்டினர்.

அறிக்கைகள் சமர்ப்பித்ததை தொடர்ந்து புரவலர்கள் *K* நஞ்சுண்டன், *B* ஜோகி மற்றும் *K* மணி ஆகியோர் சங்க முன்னேற்றம் குறித்து தங்களது பாராட்டுகளை தெரிவித்து, வருங்கால சந்ததியினர்கள் இந்த சங்கத்தினை சீரும் சிறப்புமாக நடத்தி வரவேண்டும் என்ற தங்களது விருப்பத்தை தெரிவித்தனர். சங்கத்தின் முதல் ஆண்டில் உறுதியான அடித்தளமிட்டதை ஆதாரமாகக் கொண்டு, கட்டுக்கோப்புடன் எதிர்காலத்தில் சங்க நிகழ்வுகளை மேற்கொண்டு, முக்கிமலை ஊருக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற தங்களது விருப்பத்தை முன் வைத்தனர்.

சங்கத்தின் நிர்வாகக் குழுவில், ஊர் சார்பில் பிரதிநிதிகளாக பங்கேற்கும் திரு *D* போஜன் மற்றும் திரு *L* பெள்ளி அவர்களும் சங்க நிகழ்வுகளை பாராட்டி ஊர் சொந்தங்களின் முழு ஒத்துழைப்பையும் தெரிவித்தனர்.







பொதுக்குழுவில் பங்கேற்ற அங்கத்தினர்களும், மற்ற உறுப்பினர்களும் விருந்தினர்களும் தங்கள் கருத்துக்களை பரிமாறினர். திருமதி பேபி ராமா கவுடர் (நஞ்சநாடு), திரு நகுலன் (பேலிதளா), திரு பவளா கவுடர் (பிக்கோள்), திரு ராமகிருஷ்ணன் (இத்தலார்), திரு B சுந்தரம் (முக்கிமலை) ஆகியோர் தங்களது ஆலோசனைகளை வழங்கினார்.











ஏற்கனவே சங்கத்தின் நிர்வாக குழு கூட்டங்களில் கலந்துரையாடி பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும் சில முக்கியமான பரிந்துரைகளை பொதுக்குழு மீண்டும் நினைவுறுத்தி அவற்றை ஏக மனதாக ஆமோதித்தது. அந்த முக்கியமான தீர்மானங்கள் வருமாறு:

1. 2024-2025 வருடத்திற்கான வரவு செலவு கணக்கினை பொதுக்குழு அங்கீகரித்தது.

2. 2024-2025 நடத்திய வரவு செலவு கணக்கினை இலவசமாக தணிக்கை செய்து கொடுத்த "பால் தங்கம் மற்றும் அரவிந்த் தங்கம்" தணிக்கை நிறுவனத்திற்கு சங்கத்தின் சார்பாக நன்றியை பதிவு செய்தது.

3. சங்கம் பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து நிர்வாக குழு உறுப்பினர்களில் எந்த மாற்றமும் இல்லை என்பதும் பதிவு செய்யப்பட்டது.

4. சங்கம் நடத்தும் பிரதான திட்டமான "வரி இல்லா இறுதியாத்திரை" திட்டத்திற்கு அளிக்கப்படும் நன்கொடை வரும் காலங்களில் இறுதியாத்திரைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்; அப்படி இல்லாத பட்சத்தில் நன்கொடை கொடுத்தவர்களின் சந்ததிகள் அதற்கு மறுப்பு தெரிவிக்கலாம், மற்றும் நன்கொடை இந்தத் திட்டத்தை தவிர்த்து தவறாக பயன்படுத்த முயற்சி செய்யும் தருணங்களில், நன்கொடையை சட்டரீதியாக திரும்பப்பெறும் பரிந்துரை நிர்வாக குழு கூட்டங்களில் ஒப்புதல் பெற்றது.

வாழையடி வாழையாக முக்கிமலையின் சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் சந்ததிகள் எந்த காலத்திலும் மரண நிகழ்வுகளுக்கு வரி இல்லாத இறுதியாத்திரை நடத்த

வேண்டும் என்ற ஒரே உன்னத நோக்கத்திற்காக இப்படிப்பட்ட உறுதியான பரிந்துரைக்கு ஏற்கனவே நிர்வாக குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சங்கம் ஆரம்பித்து நடத்தப்படும் முதல் ஆண்டு நிறைவு பொதுக்குழு கூட்டம் என்பதால், மேலும் வரியில்லா இறுதி யாத்திரைக்கு நன்கொடை அளித்த அன்பர்கள் கலந்து கொண்ட கூட்டம் என்பதால், இந்த பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்படும் இந்த தீர்மானத்திற்கு மாறாக பின்வரும் காலங்களில் எந்த பொதுக்குழுவும் இந்த பரிந்துரையை திருத்தம் செய்யக்கூடாது, அப்படி நடக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற தீர்மானத்தையும் பொதுக்குழு ஏகமனதாக ஆமோதித்தது.

தொடர்ந்து 2025வது ஆண்டு மே மாதம் மேல்நிலை பள்ளி படிப்பை முடித்து கல்லூரியில் படிப்பை தொடரும் சங்க உறுப்பினர் திரு J B சிவக்குமார், திருமதி ராஜேஸ்வரி



சிவகுமார் தம்பதிகளின் புதல்வி செல்வி S தனிஷா அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் கல்வி ஊக்கத் தொகையாக ரூபாய் 5,000 அளிக்கப்பட்டது. உதவித்தொகை பெற்றுக் கொண்ட



தனிஷா சங்கத்திற்கு நன்றி தெரிவித்து, தன்னை போன்ற பள்ளி மாணவ மாணவிகளுக்கு சங்கம் தொடர்ந்து ஊக்கம் அளித்து வரவேண்டும் என்று தனது விருப்பத்தை தெரிவித்தார்.

சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் தனது 92 ஆவது வயதிலும் முக்கிமலையின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு கூட்டத்தில் பங்கேற்று அனைவரையும் ஆசீர்வதித்த திருமதி ராமியம்மாள் (நுந்தளா) அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி அங்கத்தினர்கள் கௌரவித்தனர். திரு ராமியம்மாள், இப்படிப்பட்ட ஒரு உறுதியான சங்கம் இருக்கும் பொழுது, முக்கிமலையில் பிறந்த தன் போன்ற பெண்கள் தங்கள் இறுதியாத்திரை பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை என்ற நம்பிக்கை வார்த்தைகளை அனைவரிடமும் பகிர்ந்தார்.



முடிவாக 2025 ஆவது ஆண்டு விழாவினை முழுவதுமாக பங்களிப்பு செய்த புரவலர் சுகுமாரன், திருமதி நிர்மலா சுகுமாரன் தம்பதிகளுக்கு சங்கத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.



இந்த நிகழ்வுகளை தொடர்ந்து சங்கத்தின் உப தலைவர் திரு *K* அரசு அவர்கள் நன்றி உரையாற்றினார். ஆரம்ப காலத்தில் *8* பேர், *14* பேர் என்று ஆரம்பித்து, ஒவ்வொரு மாதமும் படிப்படியாக எண்ணிக்கையில் உயர்ந்த சங்கம், அரை சதத்தை எட்டி இன்றைக்கு வீர நடை போட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை பெருமிதத்துடன் நினைவு கூர்ந்தார். அனைவரின் ஒத்துழைப்பு மற்றும் ஒருமித்த எண்ணங்கள் அடிப்படையில் இந்த சங்கம் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது என்றும், சங்கத்தின் தற்போதைய நிலைப்பாடுகள் எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் என்றும் தெரிவித்தார்.



சங்கம் ஆரம்பித்து பெரும்பாரியான நிர்வாக குழு கூட்டங்கள் பெரியநாயக்கன்பாளையத்தில் குன்னாமை நிலையத்தில் நடக்கும் பொழுது, கூட்டங்கள் நடைபெறுவதற்கு இன் முகத்துடன் உதவி செய்த, இந்த வீட்டில் வசித்து வந்த சகோதரி *N.* ராஜமாள் அவர்களுக்கு சங்கம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கின்றது என்பதை தனது உரையில் தெரிவித்தார். மதிய உணவிற்கு பிறகு நடைபெற இருக்கின்ற கலை நிகழ்ச்சிகளில் அனைவரும் பங்கு கொண்டு குழந்தைகளை ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பொதுக்குழு மற்றும் விழாவில் கலந்து கொண்ட சுமார் *200* பேர் மதிய உணவு உண்டு, ஒவ்வொருவரிடமும் கருத்து பரிமாறி கொண்டது சிறப்பாக இருந்தது என்றால் மிகையாகாது.











இந்த ஆண்டு விழா நமது சொந்தங்கள் ஒன்று கூடி தங்கள் அன்பையும் அரவணைப்பையும் வெளிப்படுத்தும் விழாவாக அமைந்திருக்கின்றது என்பதே நிதர்சனம். இது போன்ற ஆண்டு விழா ஒவ்வொரு ஆண்டும் நடத்த வேண்டும் என்பதே பலரின் கோரிக்கையாகவும் இருந்தது.

தொடர்ந்து மாலை 2 மணி முதல் ஆடல் பாடல் நிகழ்வு நடந்தது. அதில் அநேக சொந்தங்கள் படுக பாடல்களுக்கு நடனம் ஆடி பார்வையாளர்களை மகிழ்ச்சித்தனர்.









மாலை 3 மணி முதல் சங்க புரவலர் திரு *K* மணி அவர்களின் பதவி செல்வி ராதிகா தலைமையில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. தனி பாடல்கள், நடனம், பாரம்பரிய கருத்து  பகிர்வு, இசை நாற்காலி நிகழ்ச்சி, இசைக்கருவிகள் வாசித்தல் போன்ற பல நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.









குறிப்பாக குழந்தைகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் சிறப்பு நிகழ்ச்சியாக கலைநிகழ்ச்சி அமைந்திருந்தது. கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற அத்தனை குழந்தைகளுக்கும் செல்வி ராதிகா அவர்கள் தனது சொந்த செலவில் பரிசு பொருட்கள் அளித்து கௌரவித்தது நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் அம்சமாக இருந்தது. சங்கத்தின் சார்பில் செல்வி ராதிகா அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி சங்க நிர்வாகிகள் கௌரவித்தனர்.





இறுதியாக கண் திருஷ்டி கழிக்கும் ஆரத்தியுடன் **“தென்னாடுடைய சிவனே போற்றி; என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி”, “ஹர ஹர மகாதேவா; ஓம் நமச்சிவாய”** என்ற மந்திரங்கள் முழங்க பொதுக்குழு மற்றும் சங்கத்தின் விழாவானது இனிதே நிறைவேறியது.

**ஓம் நமசிவாய!!!**

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## *14-9-2025 ** பெரியநாயக்கன்பாளையம்

சங்கத்தின் செப்டம்பர் மாத நிர்வாக குழு கூட்டம் *14-9-2025* அன்று கோயமுத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் காலை *10.30* மணி முதல் மதியம் *1.30* மணி வரை நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு:

**முக்கிமலை வாழ் உறுப்பினர்கள்**

திரு *K.K.* ராமா கவுடர்
திரு *D.* போஜன்
திரு *L.* பெள்ளி
திரு *B* பீமன்
திரு *J* நகுலன்
திரு *N.* ராஜன்
திரு *N* ராஜேந்திரன்

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

திரு *J.* சந்திரன் – தலைவர்
திரு *K.* அரசு - உப தலைவர்
திரு *R.* சுப்பிரமணி – செயலாளர்,
திரு *B.* சகாதேவன் – பொருளாளர்
திரு *J.* கணேஷ் – இணைப்பொருளாளர்
திரு *K.* ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு *B.* மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர்,
திரு *K.* நஞ்சுண்டன் – புரவலர்
திரு *B.* ஜோகி – புரவலர்
திரு *K.* மணி - புரவலர்
திரு *M N G* மணி – புரவலர்
திரு *N.* சுகுமாரன் – புரவலர்
திரு *J.B.* சுரேஷ் - சங்க உறுப்பினர்
திரு *J.B.* சிவக்குமார் - சங்க உறுப்பினர்

திரு B ஆனந்தகுமார் - சங்க உறுப்பினர்

திரு R. சிவகுமார் - இணை செயலாளர், திரு M.R. சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.



நிர்வாக குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அங்கத்தினர்களையும் சங்கத்தின் தலைவர் திரு J. சந்திரன் அவர்கள் வரவேற்றார். 10-8-2025 அன்று நடந்த சங்கத்தின் ஆண்டு விழாவானது சிறப்பாக நடைபெற்றது என்றும் அதற்கு ஒத்துழைத்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்தார். வரும் காலங்களிலும் சங்க செயல்பாடுகள் சிறப்பாக இருப்பதற்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குமாறு அங்கத்தினர்களை கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் பல ஆலோசனைகளும் வழங்கப்பட்டன; மேலும் கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

- வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் ஆண்டு விழா என்பது அத்தனை சொந்தங்களையும் ஒருங்கிணைக்கும் நிகழ்வு ஆதலால் இதனை ஒவ்வொரு வருடமும் அங்கத்தினர்களின் ஒத்துழைப்புடன், மற்றும் பங்களிப்புடன் அனுசரிப்பது சிறப்பாக இருக்கும் என்று கருதப்பட்டது.

- இந்த சங்கம் கோவையில் பதிவு செய்யப்பட்டிருப்பதால் வருடாந்திர ஆண்டு விழா கோவை பகுதியில் நடப்பது அத்தியாவசியம் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

- ஏற்கனவே பல கூட்டங்களில் பரிந்துரைத்தது போல நமது ஊரில் மகா சிவராத்திரி மற்றும் தெய்வ பண்டிகை அனைத்து அங்கத்தினர்களின் பங்களிப்புடன் கொண்டாடப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

- வருகின்ற ஆண்டு விழாவில் பொதுக்குழு நிகழ்ச்சிகள் துவங்குவதற்கு முன்பாக கூட்டத்திற்கு வந்த அனைத்து அங்கத்தினர்களும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து நிர்வாக அலுவல்கள் பற்றிய கருத்துரைகளும் முன்வைக்கப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- *2024-2025* ஆண்டிற்கான வரவு செலவு கணக்குகள், ஆண்டறிக்கை ஆகியவை ஆடிட்டர் திரு சத்தியமூர்த்தி அவர்களின் உதவியுடன் கோயம்புத்தூர் பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

- சங்கத்தின் பதிவு தொடங்கி, வங்கி கணக்கு ஆரம்பித்து, ஒரு வருடம் சந்தா மற்றும் நன்கொடைகள் பெற்று, மாதாந்திர கூட்டங்கள் மற்றும் பொதுக்குழு கூட்டங்கள் நடத்தி, செலவினங்களையும் முறைப்படுத்தி ஒரு வருடம் முடிந்த தருவாயில், ஒரு சங்கம் எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக நமது சங்கம் திகழ்ந்திருக்கின்றது என்றும், இந்த அனுபவம் பின்வரும் சந்ததியினர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும் என்றும் பதிவு செய்யப்பட்டது.

- சங்கம் நடத்தும் முறை, விதிகள், அறிக்கை தயாரித்தல் இது போன்ற பயிற்சிகள் சங்கத்தின் இளைய தலைமுறையினருக்கு அளிக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. இந்த பயிற்சி வரும் காலங்களில் திட்டமிடப்பட்டு முறையாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

- தற்போது சங்கத்தின் இருப்பு தொகை ரூபாய் *60,100* உள்ளது. நமது வைப்பு நிதியின் வட்டித்தொகை வரும் நவம்பர் மாதத்தில் இருந்து நமது வங்கி கணக்கிற்கு பரிமாற்றம் செய்ய இருப்பதினால் இந்த நிதியாண்டில் சுமார் ரூபாய் *1,39,000* வட்டியும் சங்க கணக்கில் சேர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே தற்போதைய நிதி நிலை திருப்திகரமாக உள்ளது என்றும் நினைவுறுத்தப்பட்டது.

- நமது ஊரில் கோயில்களுக்கு முன் கதவுகள் செய்ததன் வகையில் மொத்தம் ரூபாய் *93,165* செலவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இது ஊரில் உள்ள மொத்தம் *162* அங்கத்தினர்கள் ஏற்க வேண்டிய தொகை. இதில் நமது

குழுவில் இருக்கும் 49 பேரின் பங்காக ரூபாய் 28,180 செலுத்த வேண்டும். இதில் முன்பணமாக நமது குழுவின் சார்பில் ரூபாய் 25,000 ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றும், மீதி தொகை நமது பொது கணக்கிலிருந்து கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதற்காக அங்கத்தினர்களிடமிருந்து குறிப்பிட்ட வரித்தொகை வசூலிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

- மகா சிவராத்திரி விழாவிற்காக நமது குழுவில் இருக்கும் ஒவ்வொரு அங்கத்தினரும் ரூபாய் 1,000 அளிக்க வேண்டும் என்றும் அதற்கு மேல் ஆகும் செலவினங்களை நன்கொடை மூலம் எதிர்கொள்ளலாம் என்றும் கடந்த கால கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டது. மகா சிவராத்திரி விழா இன்னும் சில மாதங்களில் கொண்டாடப்பட இருப்பதினால் அதற்கான அங்கத்தினர்களின் பங்களிப்பை வங்கி கணக்கில் இப்பொழுது ஆரம்பித்து செலுத்தலாம் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டது.



சமீபத்தில் கண் அறுவை சிகிச்சை செய்த சங்க உறுப்பினர்கள் திருவாளர்கள் B ஆனந்தகுமார் மற்றும் B பிரபு அவர்களின் தாயார் திருமதி ராஜம்மாள் பீமன் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக மருத்துவ உதவியாக ரூபாய் 5000 வழங்கப்பட்டது. திருமதி ராஜம்மாள் அவர்கள் பூரண நலம் பெற அங்கத்தினர்கள் அனைவரும் வாழ்த்தினர். சங்கம் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை 12 அங்கத்தினர்கள் குடும்பங்களுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் சங்கம் பெருமையுடன் பதிவு செய்கின்றது.

சங்கத்தின் உப தலைவர் திரு K. அரசு அவர்கள் நன்றி தெரிவிக்க நிர்வாக குழு கூட்டம் இனிதாக முடிவுற்றது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## நிர்வாகக் குழு கூட்டம்

### *14-10-2025 ** பெரியநாயக்கன்பாளையம் - ஆன்லைன் முறையில்

நமது சங்கத்தின் அக்டோபர் மாதத்தில் நிர்வாக குழு கூட்டம் ஆன்லைன் முறையில் *14-10-2025* அன்று காலை *11* மணி முதல் நடந்தது. இன்டர்நெட் இணைப்பு சரியாக இருந்தவர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது சங்கத்தின் சார்பாக *ICICI* வங்கியில் வைத்திருக்கும் *15* லட்சம் வைப்பு நிதிக்கு கிடைக்கும் வருட வட்டிக்கு வருமான வரி பிடித்தம் வங்கியே செய்துவிடும். அந்த பிடித்தம் செய்யப்பட்ட பணத்தை நமது சங்கத்திற்கு திருப்பிக் கொடுக்க வேண்டுமானால், சங்கத்திற்கு கூடுதலாக நடப்புக் கணக்கும் இருந்தால் நல்லது என்று ஆடிட்டர்கள் பரிந்துரைத்துள்ளனர். சங்கத்திற்கு இப்பொழுது இருக்கும் *SPECIAL SAVINGS ACCOUNT* உடன் வருமான வரி சம்பந்தப்பட்ட *CURRENT ACCOUNT* ஒன்றும் இருந்தால் வட்டி பரிவர்த்தனைகளுக்கு ஏதுவாக இருக்கும் என்கின்ற படியால் ஒரு *CURRENT ACCOUNT ICICI* பிரிக்கால், பெரியநாயக்கன்பாளையம் கிளை வங்கியில் தொடங்க நிர்வாக குழு அங்கீகாரம் அளித்தது.

இந்த ஒப்புதலை *14-10-2025* தேதியிட்ட நிர்வாக குழு சிறப்பு தீர்மானமாக வங்கிக்கு அனுப்பலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## *23-11-2025 * சாய் நகர்*

23-11-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று சங்கத்தின் உபதலைவர் திரு K. அரசு அவர்கள் இல்லத்தில் காலை 10 மணிக்கு சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வருமாறு:

திரு J. சந்திரன் – தலைவர்
திரு K. அரசு - உப தலைவர்
திரு R. சுப்பிரமணி – செயலாளர்,
திரு B. சகாதேவன் – பொருளாளர்
திரு J. கணேஷ் – இணைப்பொருளாளர்
திரு K. ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு K. நஞ்சுண்டன் – புரவலர்
திரு M N G மணி – புரவலர்
திரு N. சுகுமாரன் – புரவலர்
திரு N ராஜேந்திரன் - சங்க உறுப்பினர்
திரு A மகேஷ் குமார் - சங்க உறுப்பினர்
திரு R. பிரதீப் - சங்க உறுப்பினர்
திரு B ஆனந்தகுமார் - சங்க உறுப்பினர்

திரு R பிரவீன், திரு N ஜெயவேல் ஆகியோர் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர்.

சங்கத் தலைவர் திரு. J சந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இந்த கூட்டத்தில் கீழ்கண்ட கலந்துரையாடலும் அது சம்பந்தப்பட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

- 15-11-2025 அன்று சங்க வைப்பு நிதியில் முதல் தவணையாக செலுத்திய ரூபாய் 5 லட்சம் முதிர்ச்சி பெற்று ரூபாய் 5,41,491 என்ற வகையில் நமது சங்க கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

- *22-11-2025* அன்று சங்க வைப்பு நிதியில் இரண்டாவது தவணையாக செலுத்திய ரூபாய் *5* லட்சம் முதிர்ச்சி பெற்று ரூபாய் *5,47,094* என்ற வகையில் நமது சங்க கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- மொத்தம் *10* லட்சத்திற்கான வைப்பு நிதிக்கு வட்டி வகையில் ரூபாய் *88,585* கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த தொகையானது வருமான வரி பிடித்தம் வங்கியால் செய்யப்பட்டு மீதி அளிக்கப்பட்டு இருக்கும் தொகை ஆகும்.
- சங்கத்தின் பெயரில் நடப்பு கணக்கு தொடங்கப்பட்டிருப்பதால் இந்த விவரங்களுடன் வருமான வரித்துறைக்கு சங்க கணக்குகள் அனுப்பப்படும். இதன்படி வங்கி பிடித்திருக்கும் சுமார் *7* ஆயிரம் வரி தொகையும் சங்கத்திற்கு கிடைக்கும் வாய்ப்புள்ளது என்பதையும் நிர்வாக குழு குறிப்பிட்டது.
- வைப்பு நிதியாக மற்றும் ஐந்து லட்சம் மூன்று தவணைகளில் வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது. இவை முதிர்ச்சியடையும் பொழுது அதன் விவரங்களும் அங்கத்தினர்களிடம் பகிரப்படும்.
- இன்றைய *(23-11-2025)* நாளில் நமது வங்கியில் உள்ள மொத்த தொகை ரூபாய் *11,37,162.*
- தற்போது முதிர்ச்சியடைந்துள்ள ரூபாய் *10* லட்சம் வைப்பு நிதியை சங்க நடப்புக் கணக்கில் *ICICI Pricol* வங்கி கிளையில் மீண்டும் செலுத்தலாம் என்றும் நிர்வாக குழு முடிவு செய்தது.
- இந்த வைப்பு நிதியில் ஈட்டி இருக்கின்ற வட்டி சங்கத்தின் பொது கணக்கில் சங்கத் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக வைக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.
- இந்த வட்டித் தொகையும் சேர்த்து இன்றைய சங்கத்தின் நிதி ரூபாய் *1,37,162* என்பதையும் தெரிவித்துக் தெரிவித்துக் கொள்கிறோம்.
- சங்கத்தின் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு பொதுக்குழு கூட்டம் முக்கியம் என்று கருதப்படுவதால் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதத்தில் நடக்கும் ஆண்டு விழாவை பொதுக்குழுவாக எடுத்துக் கொள்ளலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.
- இதை தவிர மூன்று காலாண்டு நிர்வாக கூட்டங்கள் நேரடியாக நடத்த வேண்டும் என்றும் மாத கூட்டங்கள் ஆன்லைன் முறையில் நடத்தலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.
- அடுத்த நேர்முக கூட்டம் *15-2-2026* ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரி தினமன்று முக்கிமலை ஊரில் நடத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் உப தலைவர் திரு *K.* அரசு அவர்கள் நன்றி தெரிவிக்க நிர்வாக குழு கூட்டம் இனிதாக முடிவுற்றது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## *27-12-2025 ** சிறுமுகை

முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்கள் நல மன்றத்தின் டிசம்பர் *2025* நிர்வாக குழு கூட்டம் சிறுமுகையில் சங்க அங்கத்தினர் திரு *R* ரமேஷ் அவர்கள் இல்ல விழா சமயத்தில் *27-12-2025* அன்று காலை *11.00* மணிக்கு நடந்தது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினார்கள் வருமாறு.

**முக்கிமலை வாழ் உறுப்பினர்கள்**

திரு *K* சந்திர கவுடர் - ஊர் தலைவர்
திரு *K.K.* ராமா கவுடர்
திரு *D.* போஜன்
திரு *L.* பெள்ளி
திரு *B* சுந்தரம்
திரு *J* நகுலன்
திரு *N* ராஜேந்திரன்
திரு *R* ரமேஷ்

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

திரு *J.* சந்திரன் – தலைவர்
திரு *K.* அரசு - உப தலைவர்
திரு *R.* சுப்பிரமணி – செயலாளர்,
திரு *B.* சகாதேவன் – பொருளாளர்
திரு *K.* ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு *K.* நஞ்சுண்டன் – புரவலர்
திரு *B.* ஜோகி – புரவலர்
திரு *K.* மணி - புரவலர்
திரு *M N G* மணி – புரவலர்
திரு *N.* சுகுமாரன் – புரவலர்
திரு *J.B.* சுரேஷ் - சங்க உறுப்பினர்



ஊர் தலைவர் திரு K சந்திர கவுடர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு J சந்திரன் அவர்களின் வரவேற்பினை தொடர்ந்து சங்கத்தின் சமீபத்திய நிகழ்வுகளை அங்கத்தினர்கள் நினைவு கூர்ந்தனர். மேலும் பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள மகா சிவராத்திரி விழாவை எவ்வாறு சிறப்பாக நடத்துவது என்ற ஆலோசனையும் நடந்தது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தகவல்கள் பகிரப்பட்டு முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

1. 27-12-2025 நாளில் சங்கத்தின் நடப்பு கணக்கில் ரூபாய் 15,000 மற்றும் சேமிப்பு கணக்கில் ரூபாய் 3,45,079 ஆக மொத்தம் ரூபாய் 3,60,079 உள்ளது. இதையும் தாண்டி வைப்பு நிதியில் சங்கத்தின் பெயரில் ரூபாய் 13 லட்சம் இருக்கின்றது.

2. 15-1-2026 அன்று நாம் ஏற்கனவே செலுத்தியுள்ள ரூபாய் 2 லட்சம் வைப்பு நிதி முதிர்ச்சி அடைந்து சுமார் ரூபாய் 2,17,000 நமது வங்கிக் கணக்கிற்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

3. முதிர்ச்சி பெறும் இந்த வைப்பு நிதி தொகையையும் சேர்த்து தற்போது உள்ள தொகையிலிருந்து தேவையான மீதி பணத்தை எடுத்து மேலும் ரூபாய் 5 லட்சம் வைப்பு நிதியாக 1-2-2026 முதல் வங்கியில் முதலீடு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

4. மகா சிவராத்திரி விழாவிற்கு அங்கத்தினார்கள் அளிக்க வேண்டிய ரூபாய் 1,000 சந்தா தொகையை வரும் வாரங்களில் அனைத்து அங்கத்தினர்களும் வங்கியின் நடப்பு கணக்கில் செலுத்துமாறு அறிவுறுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

5. மகா சிவராத்திரி சந்தா தொகையை தாண்டி அங்கத்தினர்கள் நன்கொடை அளிக்க முன் வந்தால் அதை மகிழ்ச்சிகரமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

6. விழா செலவினங்கள் போக மீதி பணம் இருந்தால் அதனை பொது நிதிக்கு கொண்டு வரலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

7. சென்ற முறை சாமியான போன்ற பொருட்கள் வாங்கியது போன்று இந்த முறையும் விழாக்களுக்கு வேண்டிய சீரியல் செட் போன்ற பொருள்கள் நன்கொடை மூலம் வாங்கினால் சிறப்பாக இருக்கும் என்றும் கருதப்பட்டது.

8. மகா சிவராத்திரி விழாவை பற்றி மேலும் திட்டமிட ஜனவரி மாதம் நேர்காணல் கூட்டம் நடத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தின் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

9. அனைத்து அங்கத்தினர்களையும் அழைத்து தமது இல்ல விழாவுடன் சேர்ந்து நிர்வாகக் குழு கூட்டமும் நடைபெற ஏற்பாடு செய்த அங்கத்தினர் ரமேஷ் அவர்களுக்கு சங்க அங்கத்தினர்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

10. இறுதியாக சங்கத்தின் புரவலர் திரு *B.* ஜோகி அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே முடிந்தது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## *28-1-2026*

சங்கத்தின் ஜனவரி 2026 நிர்வாக குழு கூட்டம் 28-1-2026 அன்று நேர் சந்திப்பு முறையில் பெரியநாயக்கன்பாளையம் குன்னாமை நிலையத்தில் மாலை 2 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு.

**முக்கிமலை வாழ் உறுப்பினர்கள்**

திரு K. சந்திரா கவுடர் - ஊர் தலைவர்
திரு D. போஜன் - சங்க உறுப்பினர்
திரு B பீமன் - சங்க உறுப்பினர்
திரு J நகுலன் - சங்க உறுப்பினர்
திரு N ராஜேந்திரன் - சங்க உறுப்பினர்
திரு R. சுகுமார் (திரு KK ராமா கவுடர்) - சங்க உறுப்பினர்

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

திரு J. சந்திரன் – தலைவர்
திரு K. அரசு - உப தலைவர்
திரு R. சுப்பிரமணி – செயலாளர்,
திரு B. சகாதேவன் – பொருளாளர்
திரு K. ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு K. நஞ்சுண்டன் – புரவலர்
திரு B. ஜோகி – புரவலர்
திரு M N G மணி – புரவலர்
டாக்டர் N சுகுமாரன் – புரவலர்

இந்த நேர்முக கூட்டமானது 15-2-2026 அன்று நடைபெற உள்ள மகா சிவராத்திரி விழாவை எப்படி சிறப்பாக நடத்துவது என்பதற்கான திட்டமிடல் கூட்டமாக இருந்தது. இதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மகா சிவராத்திரி விழாவில் அனைத்து அங்கத்தினர்களும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. கோவையிலிருந்து ஊருக்கு செல்வதற்காக பிரத்தியேக வாகன ஏற்பாடு செய்யப்படும். வாகனம் 15-2-2026 காலை 6.30 மணிக்கு கோவையில் இருந்து புறப்பட்டு ஊருக்கு சென்று மறுநாள் காலை 11.00 மணிக்கு கோவைக்கு புறப்படும். வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணிக்கிறார்கள் என்பதை பொறுத்து தகுந்த வாகனங்கள் ஏற்பாடு செய்ய வேண்டி உள்ளது. எனவே கோவையில் வாழும் நமது அங்கத்தினர்கள் எத்தனை பேர் விழாவிற்கு அவர்கள் குடும்ப உறுப்பினர்களுடன் வருகிறார்கள் என்ற தகவலை 10-2-2026 -க்கு முன்பு கண்டிப்பாக செயலாளர் திரு சுப்பிரமணி அல்லது பொருளாளர் திரு சகாதேவன் ஆகியோருக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
3. இம்முறை உணவு தயாரிப்பதற்காக முட்டிநாடு திரு சிவாசு அவர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதால் அவரது பணிகளை கண்காணித்து, அவர் பங்களிப்பு சிறப்புடன் இருக்குமாறு ஊக்கப்படுத்த வேண்டும் என்று ஊர் அங்கத்தினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. மகாசிவராத்திரி விழாவில் பஜனை, பிரசங்கம் போன்றவற்றில் கலந்து கொள்ள விருப்பமுள்ள அங்கத்தினர்கள் மற்றும் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
5. மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு நமது ஊர் சொந்தங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைத்து, விழா சிறப்பாக நடைபெறுமாறு உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.
6. மகாசிவராத்திரிக்கு நன்கொடை அளிக்க மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுக்கலாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.
7. ஊர் பொது விழாக்களுக்கு நமது ஊர் சகோதரிகள் அனேக பேர் உத்வேகத்துடன் பங்கெடுத்துக் கொள்வதை அங்கத்தினர்கள் பாராட்டி, மகாசிவராத்திரி விழாவிலும் அவர்கள் கலந்து கொள்ளும்படி ஊக்குவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இறுதியாக சங்கத்தின் உப தலைவர் திரு K அரசு அவர்கள் நன்றியுரை நவில நிர்வாக குழு கூட்டம் இனிதாக நிறைவுற்றது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு இணைந்த கூட்டம்

## *15-2-2026* * முக்கிமலை

*முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்கள் நல மன்றத்தின் பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு இணைந்த கூட்டம் 15-2-2026 மகா சிவராத்திரி தினத்தன்று முக்கிமலை ஊரில் மாலை 6 மணி அளவில் நடைபெற்றது. மகா சிவராத்திரி விழாவில் முக்கிமலை சொந்தங்கள், முக்கிமலை பெண்கள், மருமகன்கள், குழந்தைகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.*



விழாவினை ஒட்டி ஏற்பாடு செய்த அன்னதானம் மற்றும் பக்தர்கள் ஆடல் பாடல் நிகழ்வும் சிறப்பாக அமைந்தது.













இரவு முழுவதும் 50க்கும் மேற்பட்ட பக்தர்கள்
மற்றும் சொந்தங்கள் சிவ நாமம்
சொல்லி சிவபெருமானை வழிபட்டனர்.








மகாசிவராத்திரி விழாவில் 150 க்கு மேற்பட்ட சொந்தங்கள் கலந்து இருந்தாலும் பொதுக்குழுவில் சுமார் 40 அங்கத்தினர்கள் மற்றும் சொந்தங்கள் பங்கேற்றனர்.





கூட்டத்தின் தொடக்கத்தில் ஊர் தலைவர் திரு K சந்திர கவுடர் அவர்கள் அனைவரையும் வரவேற்று மகா சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற வேண்டும் என்றும் மேலும் அனைவரும் ஒற்றுமையுடன் முக்கிமலை வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சங்கத் தலைவர் திரு J சந்திரன் அவர்கள் இதுவரை சங்கத்தின் வளர்ச்சி சிறப்பாக இருக்கிறது என்றும் வரும் காலங்களில் சங்கம் மகத்தான பணிகளை செய்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஊர் பெரியவர் திரு K K ராமா கவுடர் அவர்கள் ஆண்டவனின் அருளால் சங்க நிகழ்வுகள் ஊர் சொந்தங்களின் ஒற்றுமையுடன் வரும் காலங்களில் மேலும் சிறப்படையும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து புரவலர் M N G மணி அவர்கள் சங்கத்தின் தற்போதைய வளர்ச்சி, நிதிநிலை, எதிர்கால திட்டங்கள் இவற்றை குறிப்பிட்டு அங்கத்தினர்களின் கலந்துரையாடலை தொடங்கி வைத்தார்.

அந்த கூட்டத்தில் நடந்த கலந்துரையாடல் மற்றும் தீர்மானங்களின் சாராம்சம் வருமாறு:

1. கூட்டத்தில் சங்கத்தின் தற்போதைய நிதிநிலை மற்றும் வருங்கால வளர்ச்சி குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. சங்கத்தின் வரவு செலவு கணக்குகள் வருமான வரித்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது என்பதனை அனைவரும் பதிவு செய்தனர்.

2. மகா சிவராத்திரி விழாவிற்கு அங்கத்தினர்கள் மற்றும் ஊர் சொந்தங்கள் அளிக்கும் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி இந்த விழா ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று ஏக மனதாக பரிந்துரைக்கப்பட்டது.

3. மகா சிவராத்திரி மற்றும் நமது விழாக்களுக்கு நமது ஊர் பெண்கள் பெருவாரியாக காணிக்கை மற்றும் நன்கொடை அளிப்பது குறிப்பிட வேண்டிய சிறப்பு அம்சம் என்பதை அனைவரும் வலியுறுத்தினர்.

4. மகா சிவராத்திரி விழாவிற்கு பெறப்பட்ட சந்தா மற்றும் நன்கொடை, செலவினங்களை மேற்கொள்வதற்கு போதுமானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. விழாவிற்கான வரவு செலவு கணக்கு விவரங்கள் விழா முடிந்தவுடன் அங்கத்தினர்களிடம் பகிரப்படும்.

5. வரும் காலங்களில் வரவு செலவு கணக்கு தணிக்கையின் போது சங்கத்திற்காக வாங்கப்பட்ட பொருட்களின் விவரங்களும் தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என்ற விதிக்கேற்ப, சங்கத்திற்காக வாங்கும் பொருட்கள் பட்டியல் பதிவேடு *(Stock Register)* தற்பொழுது முதல் செயல்பாட்டிற்கு வர வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

6. இதுவரையில் சங்கத்திற்காக பெறப்பட்ட மற்றும் சங்க நிதி மூலம் வாங்கப்பட்ட பொருட்களின் பட்டியல் தயார் செய்து அவற்றில் எந்தெந்த பொருட்கள் எங்கு இருக்கின்றன என்பதை பற்றிய விவரங்கள் சேகரிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

7. இந்த பதிவேட்டை பராமரிப்பதற்கு சங்க உறுப்பினர் திரு. *L* பெள்ளி அவர்கள் ஏகமானதாக பொதுக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

8. சங்கத்தின் வளர்ச்சி, அங்கத்தினர்கள் மற்றும் ஊர் சம்பந்தப்பட்ட பொது நிகழ்வுகளை தெரிந்து கொள்ள விருப்பப்பட்ட பெண்கள் வாட்ஸ் அப் குரூப் தயார் செய்து முக்கியமான நிகழ்வுகளை அவர்களுடன் பகிர வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

9. பொதுக்குழு கூட்டத்தில், *2026* ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள சங்கத்தின் ஆண்டு விழாவிற்கு முக்கிமலையின் அமரர் திரு பெள்ளி கவுடர் குடும்பம் சார்பாக ரூபாய் *10,000* நன்கொடை வழங்க உள்ளதாக கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் திரு *B* பீமன், திரு *R* ரமேஷ் மற்றும் திரு *R*

சுப்பிரமணி ஆகியோர் தெரிவித்தனர். இந்த நன்கொடை அளிக்க முன்வந்தமைக்கு திரு பெள்ளி கவுடர் குடும்ப அங்கத்தினர்கள் அனைவருக்கும் பொதுக்குழு பாராட்டுதல்களை தெரிவித்தது.

10. சங்கத்தின் வைப்பு நிதி 20 லட்சத்தை தொடும்பொழுது, அந்த காலகட்டத்தில் அங்கத்தினர்கள் செலுத்தும் சந்தா விவரங்களை மறுபரிசீலனை செய்யலாம் என்ற பரிந்துரையும் பொதுக்குழுவால் ஏற்கப்பட்டது.

சங்கம் ஆரம்பித்து இரண்டு வருட காலம் நிறைவு பெறுவதற்கு முன்னதாகவே வலுவான அடித்தளம் அமைத்து, சங்க வளர்ச்சி வேகத்துடனும் விவேகத்துடன் உறுதியுடனும் நடை பெறுவதற்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற எல்லாம் வல்ல பரம்பொருள் சிவபெருமானுக்கும், குலதெய்வம் எத்தை அம்மனுக்கும் அங்கத்தினர்கள் தங்களது ஆத்மார்த்தமான நன்றியை செலுத்தி, வரும் காலங்களிலும் தம்மை வழி நடத்துமாறு பிரார்த்தனை செய்தனர்.





சங்கத்தின் உப தலைவர் திரு K அரசு அவர்களின் நன்றியுடன் பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் நிறைவு பெற்றது.

**வளர்க சங்கம்!!**

**ஓம் நமசிவாய!!!**

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
# முதல் ஆண்டு நிறைவு விழா செயல் அறிக்கை

**10-8-2025**

"முக்கிமலைகாகி முக்கிமலையவக்க" என்ற சித்தாந்தத்துடன் 2-6-2024 அன்று 14 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்கள் நல மன்றம், சங்க நிர்வாகிகள் பதவியேற்ற நாளான 11-8-2024 அன்று 36 ஆக உயர்ந்து, 2024 செப்டம்பர் கடைசிக்குள் 50 அங்கத்தினர்கள் என்ற இலக்குடன் அரை சதத்தை எட்டி, தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**நிர்வாக குழு கூட்டங்கள்**

சென்ற வருடம் சங்க பதவியேற்பு விழாவிற்கு முன்பாக சங்கத்தின் சார்பில் 12-5-2024, 2-6-2024, 23-6-2024, 14-7-2024, 21-7-2024, 28-7-2024, 4-8-2024 ஆகிய தினங்களில் மொத்தம் ஏழு பூர்வாங்க கூட்டங்கள் நடந்தன.

11-8-2024 அன்று நடந்த பதவி ஏற்பு விழாவினை தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. 1-9-2024, 6-10-2024, 3-11-2024. 8-12-2024, 12-1-2025, 26-2-2025, 15-3-2025, 20-4-2025, 18-5-2025, 15-6-2025 மற்றும் 13-7-2025 ஆகிய நாட்களில் மொத்தம் 11 நிர்வாக குழு கூட்டங்கள் நடைபெற்றன.

முதல் பொதுக்குழு கூட்டம் 11-8-2024 அன்று இதே மீரா மஹாலில் நடந்தது. இரண்டாவது பொது குழு கூட்டம் மகா சிவராத்திரி நாளான 26-2-2025 அன்று முக்கிமலை ஊரில் நடந்தது. இது தவிர நமது சங்கம் மற்றும் ஊர் ஒருங்கிணைப்பு கூட்டம் 15-8-2024 அன்று உதகையில் நடந்தது.

ஆக மொத்தம் சங்கம் ஆரம்பித்த முதல் வருடத்தில் 20 கூட்டங்களுக்கு மேலாக நமது சங்கத்தினர்களும் நிர்வாக குழுவும் சந்தித்து சங்கத்தின் வளர்ச்சி பற்றி தொடர்ச்சியாக கலந்துரையாடி உள்ளனர்.

இந்த கூட்டங்களை தாண்டி விழாக்களிலும் சொந்தங்களின் குடும்ப ஈமச்சடங்கு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பொழுது சங்க தொடர்பான செய்திகள் பரிமாறப்பட்டன. எனவே அநேக அங்கத்தினர்கள் சொன்னது போல ஒவ்வொரு நாளும் சங்க அங்கத்தினர்கள் ஒவ்வொருவரிடம் பேசுவது போன்ற சூழ்நிலை கடந்த ஒரு வருடத்தில் அனைவராலும் உணர முடிந்தது.

23-7-2025 நடந்த தெய்வ பண்டிகை மற்றும் இதுவரை நடந்த நிர்வாகக் குழு கூட்டங்களை சேர்த்து, சங்கம் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை நடந்த அத்தனை கூட்டங்களின் தீர்மானங்களும் நமது சங்க இணையத்தளம் www.mmcbesociety.com இல் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது.

**சங்கத்தின் திட்டங்கள்**

சங்கத்தின் பிரதான திட்டங்களான வரியில்லா இறுதியாத்திரை, மருத்துவ உதவி, கல்வி உதவி ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு:

**வரியில்லா இறுதியாத்திரை:**

சங்கத்தின் முதன்மை திட்டமான "வரியில்லா இறுதியாத்திரை" திட்டத்திற்கு குறிப்பிட்ட காலக்கெடுவான மார்ச் 2025 க்கு முன்பாகவே ரூபாய் 15 லட்சம் நிதி திரட்டி அதனை ICICI வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக செலுத்தி இருக்கிறோம்.

இன்றைய அங்கத்தினர்களும், வருங்கால சந்ததியினரும் இந்த நிரந்தர வைப்பு நிதியின் மூலமாக பெறப்படும் வட்டியை கொண்டே இறுதியாத்திரை செலவினங்களை மேற்கொள்ளலாம். இந்த திட்டம் ஆயிரம் காலத்து பயிராக இருக்கப் போகின்றது என்பதை நினைக்கும் பொழுது உள்ளம் நெகிழ்கிறது.

நமது அங்கத்தினர் திரு N மாதன் அவர்கள் இறுதி யாத்திரைக்கு ஏற்பட்ட செலவான ரூபாய் 37,959 முழுவதுமாக சங்கம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈம சடங்குகளில் உபயோகப்படுத்தும் குடைகள், சால்வை, சின்னதா அண, தலை அக்கி கத்தி, ஓலை கத்தி, ஓலை மூக்குத்தி, ஒணக்கைதண்டு, பூக்காசு மற்றும் தேவைப்பட்ட பொருட்களை 2 செட் பெற்று அதில் ஒரு செட் முக்கிமலையிலும் இரண்டாவது செட் கோவையிலும் பாதுகாப்புடன் உள்ளது.

கேஸ் மயான திட்டத்திற்கு அங்கத்தினர்களின் நன்கொடை மூலம் இந்த திட்டம் பற்றி பேசப்பட்ட ஒரு வார காலத்திலேயே நமது பங்களிப்பான ஒரு

லட்சம் ரூபாயை செலுத்தி முன்னோடியாக இருந்துள்ளது நமது சங்கம். முக்கிமலையில் இருந்து தகனம் செய்யப்பட்ட முதல் பூத உடல் என்பது நமது சங்க அங்கத்தினர் N மாதன் அவர்களது என்பது குறிப்பிடத்தக்கது.

**மருத்துவ உதவி**

அங்கத்தினர்களின் குடும்ப உறுப்பினர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும்பொழுது முடிந்த உதவி செய்ய வேண்டும் என்ற திட்டத்தின் மூலமாக, இதுவரை 10 பேருக்கு ரூபாய் 50,000 உதவித்தொகை கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்க மற்றும் ஒரு அம்சம். உதவி பெற்றோர் விபரம் வருமாறு:

1. 27-9-2024 - N ராஜேந்திரன் - ரூபாய் 5,000
2. 8-10-2024 - B பீமன் - ரூபாய் 5,000
3. 9-11-2024 - K ராமச்சந்திரன் (மனைவி சரோஜா) - ரூபாய் 5,000
4. 25-11-2024 - M R சிவக்குமார் (மனைவி சங்கீதா) - ரூபாய் 5,000
5. 1-3-2025 - K சந்திர கவுடர் - ரூபாய் 5,000
6. 4-3-2025 - C சோமசுந்தரம் ( புதல்வி ரித்விகா) - ரூபாய் 5,000
7. 18-3-2025 - J நகுலன் - ரூபாய் 5,000
8. 25-6-2025 - J B சுரேஷ் ( தாயார் ராஜியம்மாள்) - ரூபாய் 5,000
9. 27-7-2025 - R சிவகுமார் (தந்தையார் K ராஜு கவுடர்) - ரூபாய் 5,000
10. 27-7-2025 - R சுனில் குமார் ( தாயார் மேரியம்மாள்) - ரூபாய் 5,000

வரும் காலங்களிலும் இதுவரை மருத்துவ உதவி பெறாத அங்கத்தினர்களின் குடும்பங்களில் மருத்துவ சிகிச்சைக்காக உதவி தேவைப்படும் பொழுது, சங்கம் அவர்களுக்கு ரூபாய் 5,000 உதவி அளிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கல்வி உதவி**

குழந்தைகள் நன்கு கல்வி பெறவேண்டும் என்பதற்காக கல்வி ஊக்கத்தொகை திட்டம் நிறுவி அதன் மூலம் சங்கம் ஆரம்பித்த முதல் ஆண்டே செல்வி R ரினிதாவிற்கு 5,000 ரூபாய் உதவித்தொகை அளித்தது படிக்கும் குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கும் செயல்.

சங்கத்தின் இந்த உதவியைத் தவிர நல் உள்ளம் கொண்ட நமது சங்க உறுப்பினர்கள் சங்க அங்கத்தினர்களின் குழந்தைகளுக்கு தனிப்பட்ட முறையில் அவர்களால் முடிந்த அளவு கல்விக்காக உதவி வருகின்றார்கள்.

**ஊர் பெண்கள் மற்றும் மருமகள்கள் குடும்ப மரண நிகழ்வுகள்:**
நம் ஊர் பெண்கள் மற்றும் மருமகள்கள் குடும்பங்களில் மரண நிகழ்வுகள் ஏற்படும் போது சங்கத்தில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்ற பரிந்துரையை மேற்கொண்டு கடந்த வருடம் 9 நிகழ்வுகளில் சங்க அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். அந்த விபரங்கள் வருமாறு:

1. கோத்திபென் திரு அரசய்யா அவர்கள் (நமது புரவலர் N சுகுமாரனின் மாமனார்) - 27-5-2024 - கோத்திபென்னில் தகனம்.

2. திரு K K ராமா கவுடர் சகோதரி மந்தணை திருமதி மல்லக்கா அவர்கள் - 28-5-2024 - மந்தணையில் தகனம்.

3. நமது சங்க உறுப்பினர் திருமதி பார்வதி கணேசன் அவர்கள் தந்தையார் திரு ராமா கவுடர் அவர்கள், நஞ்சநாடு - 22-7-2024 - கோவையில் தகனம்.

4. திரு H பீமா கவுடர் மகள் திருமதி வனஜாவின் கணவர் திரு சுந்தர்ராஜ் அவர்கள், நஞ்சநாடு - 5-8-2024 - நஞ்சநாடில் தகனம்.

5. திரு போஜபெள்ளி அவர்கள் மகள் திருமதி சித்ராவின் கணவர், தேனாடு -19-8-2024 - தேனாடில் தகனம்.

6. திரு நஞ்சா கவுடர் மகள் திருமதி ஷீலாவின் கணவர் திரு ராதாகிருஷ்ணன் அவர்கள், கிண்ணக்கொரை - 26-8-2024 - கிண்ணக்கொரையில் தகனம்.

7. திரு தாத்தா கவுடர் சகோதரி திருமதி குண்டியம்மாள் அவர்கள், இத்தலார் - 21-11-2024, கோவையில் தகனம்.

8. திரு J சந்திரன் மற்றும் J கணேஷ் அவர்களின் அத்தை திருமதி ஜானகி அம்மாள் அவர்கள், கிண்ணக்கொரை - 15-2-2025 - கிண்ணக்கொரையில் தகனம்.

9. திரு லிங்கா கவுடர் மகள் திருமதி சரோஜியம்மாள் அவர்கள், - பிக்கட்டி ஓசஹட்டி, - 4-5-2025, ஓசஹட்டியில் தகனம்.

**நமது சங்க உறுப்பினர் மரணம்**
நமது சங்க உறுப்பினர் திரு N மாதன் அவர்கள் 25-2-2025 அன்று கோவையில் இயற்கை எய்தினார். முக்கிமலையில் நடைபெற்ற அவரது ஈமச்சடங்கிற்கு பெருவாரியான சங்க உறுப்பினர்கள் சென்று இறுதி யாத்திரையில் கலந்து கொண்டனர்.

**நமது ஊரில் நிகழ்ந்த பிற மரணங்கள்**

1. மேல்கேரி திரு லிங்கா கவுடர் மகன் திரு L சந்திரன் அவர்கள் - 28-6-2024 - முக்கிமலையில் தகனம்.

2. திரு M B பெள்ளா கவுடர் மனைவி மணியம்மாள் அவர்கள் - 2-8-2024 - கோவையில் மரணம் மற்றும் தகனம்.

3. திரு S லிங்கா கவுடர் மனைவி சென்னை அம்மாள் அவர்கள் - 3-10-2024 - ஊரில் தகனம்.

4. திரு B போஸ் கவுடர் அவர்கள் - 14-11-2024 - முக்கிமலையில் தகனம்.

5. திருமதி ஜானி ஆரி அவர்கள் - 28-11-2024 - கோவையில் மரணம் - முக்கிமலையில் தகனம்.

6. திரு J ராமா கவுடர் அவர்கள் - 2-7-2025 - முக்கிமலையில் தகனம்.

திருமதி மணியம்மாள், திருமதி ஜானி ஆகியோர் மரண செய்தி கேட்டு அங்கத்தினர்கள் நேராக சென்று அஞ்சலி செலுத்தினர். மற்ற சொந்தங்கள் மரணத்திற்கு பின்பு, அவர்கள் குடும்பங்களுக்கு சென்று துக்கம் விசாரித்தனர். ஆனால் இந்த மரண நிகழ்வுகள் சங்க உறுப்பினர்களுக்கு வாட்ஸ் அப் மூலம் அந்த நிகழ்வு நடந்த அன்றே தெரிவிக்கப்பட்டது.

**மருத்துவமனைக்கு சென்று நலம் விசாரித்தல்:**
கடந்த வருடத்தில் முக்கிமலையில் வாழும் எந்த சொந்தமாக இருந்தாலும் கோயம்புத்தூரில் மருத்துவமனையில் இருக்கும் செய்தி, குறித்த நேரத்தில் கேட்டறியும் பொழுது, சங்க உறுப்பினர்கள் அநேக பேர் சென்று நலம் விசாரித்தது நமது விசால எண்ணங்களுக்கு சான்று.

**சங்க உறுப்பினர்களின் இல்ல விழா**
சங்க உறுப்பினர்களின் இல்ல விழாக்களில் அங்கத்தினர்கள் கலந்து கொள்வதும் நடைமுறைக்கு வந்திருப்பது இன்னும் ஒரு சிறப்பு. அதன்படி திரு B ராஜேஷ் அவர்களின் புதல்வி மற்றும் திரு J கணேஷ் அவர்கள் புதல்வி பூப்பு நன்னீராட்டு விழாவில் அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.

**கோவில் பூஜை**
முக்கிமலை கோவிலில் நடக்கும் பூஜைகளுக்கு வாரம் ரூபாய் 500 செலவு ஆகலாம் என்றும் எந்தெந்த குடும்பங்கள் எப்பொழுது பூஜை ஏற்பாடுகளுக்கான செலவினங்களை ஏற்க வேண்டும் என்று பட்டியலிட்டு, இந்தப் பட்டியலின்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

**ஆன்மீக விழாக்கள்:**
சங்கம் ஆரம்பித்து இந்த ஒரு ஆண்டில் மூன்று பெரிய ஆன்மீக விழாக்கள் நடந்தன. இவற்றில் பெருவாரியான அங்கத்தினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

1. 26-2-2025 இல் நமது ஊர் சிவன் கோவிலில் இரவு முழுவதும் மகா சிவராத்திரி பூஜைகள் நடைபெற்று அதில் 60க்கும் மேற்பட்ட சொந்தங்கள் கண் விழித்து பக்தி வழிபாடு செய்தது குறிப்பிடத்தக்கது. இந்த விமரிசையான மகா சிவராத்திரி விழாவில் கிடைத்த அனுபவத்தை முன்னிறுத்தி வரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் நமது ஊரில் மகா சிவராத்திரி விழா சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று சங்கம் தீர்மானித்திருக்கின்றது.

2. 13-7-2025 அன்று சங்க உறுப்பினர்களும் மற்றும் சொந்தங்களும் ஆக சுமார் 100 பேர் அவிநாசியில் அமைந்திருக்கின்ற அவினாசிலிங்கேஸ்வரர் சிவத்தலத்திற்கு சென்று நமது ஊர் சார்பாக நேர்த்திக்கடன் செலுத்தினர். இந்த ஆன்மீக நிகழ்வு சங்கத்திற்கு ஒரு எழுச்சியை அளித்திருக்கின்றது. இது போன்ற கோவில் பயணங்கள் ஒவ்வொரு வருடமும் இருக்க வேண்டும் என்பது அனைவரது விருப்பம்.

3. 23-7-2025 அன்று கோவையில் இருந்து 21 சொந்தங்கள் நமது ஊரில் தெவ்வ பண்டிகைக்கு சென்று ஊர் சொந்தங்களுடன் சேர்ந்து காணிக்கை செலுத்தி பின்பு அன்னதானத்தில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு வருடமும் தெவ்வ பண்டிகைக்கு இதுபோன்று ஊரில் காணிக்கை செலுத்துதல் மற்றும் அன்னதானம் நடக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

**நிதிநிலை**
**2024-2025 நிதியாண்டில்**, வருட சந்தா மற்றும் நன்கொடை வகையில் பெறப்பட்ட **மொத்த தொகை ரூபாய் 18,45,459.** இதில் செலவினங்கள் வகையில் **மொத்த செலவு ரூபாய் 3,24,960.** சங்கத்தின் வரவு செலவு கணக்கு மற்றும் நிதி நிலை அறிக்கை "பால் தங்கம் அரவிந்த் தங்கம் தணிக்கை நிறுவனம்" மூலமாக கட்டணமில்லாமல் தணிக்கை செய்யப்பட்டு உள்ளது. இந்த தணிக்கை நிறுவனத்திற்கு சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் சங்க கணக்குகள் சரியாக இருப்பதற்கு சங்க பொருளாளருக்கு உதவி செய்து

வரும் திரு N வேல்முருகன் அவர்களுக்கும் சங்கம் தனது நன்றியை தெரிவிக்கின்றது.

**2025-2026 நிதியாண்டில்**, **27-7-2025** வரை சந்தா மற்றும் நன்கொடை மூலமாக பெற்ற தொகை **ரூபாய் 1,60,393.** இதில் அவிநாசி கோயில் யாத்திரை சென்ற பொழுது மதிய உணவிற்காக திரு ராமச்சந்திரன் குடும்பம் நேரடியாக அளித்த தொகை ரூபாய் 16,100, மற்றும் தேநீருக்காக திரு பில்லா கவுடர் குடும்பம் நேரடியாக செலவு செய்த தொகை ரூபாய் 3,500 அடங்கும்.

இந்த நிதி ஆண்டில் இதுவரை ஆன **செலவினங்கள் ரூபாய் 1,31,693**. இந்த செலவினத்தில் மருத்துவ உதவி, கல்வி உதவி, தெய்வ பண்டிகை பூஜை மற்றும் அன்னதானம், வாகன செலவுகள் மற்றும் நமது ஊர் கோவிலில் முன் கதவு செய்த செலவுகள் அடங்கும். முக்கிமலை ஊர் கோயில்களை விலங்குகளிலிருந்து பாதுகாப்பதற்காக துருப்பிடிக்காத எக்கு கதவுகள் மொத்த ஊர் சார்பாக பொருத்தப்படுகின்றன. இதற்கு சுமார் **ரூபாய் 90,000** செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதற்காக நம் அங்கத்தினர்கள் 50 பேர் ஒவ்வொருவரும் ரூபாய் 500 வீதம் பங்களிக்க வேண்டும் என்று ரூபாய் 25,000 க்கான காசோலை நமது ஊர் சொந்தங்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த தொகை அங்கத்தினர்களிடமிருந்து தனியாக வசூல் செய்யப்படுவதில்லை.

எனவே **சங்கம் ஆரம்பித்த நாள் முதல் 27-7-2025 வரை** நாம் பெறப்பட்ட மொத்த சந்தா மற்றும் நன்கொடை **தொகை ரூபாய் 20,05,852.** எல்லா செலவினங்கள் வகையில் இதுவரை நமது **செலவு ரூபாய் 4,56,653.** மீதி உள்ள தொகையில் **ரூபாய் 15,00,000 வைப்பு நிதியில்** உள்ளது. அனைத்து செலவினங்களுக்காக கொடுத்துள்ள காசோலைகளும் வங்கியில் செலுத்திய பின்பு, இந்த ஆண்டு நிலுவையில் உள்ள சந்தா தொகை சேர்த்து **நடப்பு கணக்கில் ரூபாய் 59,199** இருக்கும்.

நாம் ஏற்கனவே வைப்பு நிதியில் வைத்திருக்கின்ற 15 லட்சத்திற்கு இந்த **2025-2026 வருடம் மட்டும் ரூபாய் 1,31,820 வட்டி கிடைக்கும்**. இந்த வட்டி தொகை வரும் நவம்பர் மாதத்தில் இருந்து மார்ச் 2026 வரை நமது வைப்பு நிதி பத்திரங்கள் முதிர்ச்சி பெறும் நாட்களில் நமது வங்கி கணக்கில் சேர்க்கப்படும்.

எனவே சங்கத்தின் நிதிநிலை நாம் அனைவரும் எதிர்பார்த்ததை விட மிகச் சிறப்பான முறையில் உள்ளது என்பது நம் அனைவருக்கும் பெருமை. சங்கத்தின் உறுதியான நிதி நிலைக்கு அடித்தளமிட்ட அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் அங்கத்தினர்களுக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற முதுமொழிக்கேற்ப சங்கம் ஆரம்பித்த நாள் முதல் "இது எங்கள் இயக்கம்" என்ற எண்ணத்துடன் ஒவ்வொரு அங்கத்தினரும் அவர்களின் ஒப்பற்ற உழைப்பை அளித்ததே சங்கத்தின் வளர்ச்சிக்கு காரணம் என்றால் மிகையாகாது. சங்கத்தின் ஒரு ஆண்டு வளர்ச்சி என்பது மனநிறைவு அளிக்கின்றது.

நம்மைச் சுற்றி நம் சொந்தங்கள் ஆலமர விழுதுகள் போல உறுதியாக இருக்கின்றனர் என்ற எண்ணம் ஒவ்வொரு அங்கத்தினரில் மனதிலும் பிரதிபலிப்பதை இந்த ஒரு ஆண்டு செயல்களில் காண முடிந்தது. இது போன்ற ஒற்றுமையுடனும் சிரத்தையுடனும் வரும் காலங்களில் நாம் செயலாற்றும் பொழுது அனைவருக்கும் முன்மாதிரியாக இருப்போம் என்பதை நினைவில் கொண்டு நம்மை காத்து வரும் பரம்பொருளுக்கு நன்றி மலர்களை காணிக்கையாக்குகின்றோம்.

**2024-25ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு சங்க பொருளாளரால் அனைவரின் முன்னிலையிலும் படித்து காண்பிக்கப்பட்டது.**

**பொதுக்குழு உறுப்பினர்களால் நிதி அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

வளர்க சங்கம்!!

**ஓம் நமசிவாய!!!**

10-8-2025